# KOPAY CHRISTIAN COLLEGE

# MAGAZINE




DECEMBER 1970

# KOPAY CHRISTIAN COLLEGE

# MAGAZINE

''அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்''

''அறிவுடை ஒருவனே அரசனும் விரும்பும்''

''வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்''

**DECEMBER 1970**

## நன்றி

எமக்கு சஞ்சிகை அனுப்பி எம்மை மகிழ்வித்த
யாபேருக்கும் எமது மனமார்ந்த நன்றி

PRINTED AT THE SRI KANTHA PRESS, JAFFNA—Telephone: 256

## CONTENTS


| | | | Pages |
|---|---|---|---|
| 1. | Principal's Notes | | 1 |
| 2. | எழுத்தின் வகைகள் | — | 1 |
| 3. | தமிழ்ச்சோலை | — | 8 |
| 4. | வள்ளுவர் அருளிய வாழ்வுக்கலை | — | 11 |
| 5. | திருமதி R. R. சொலமன்ஸ் | — | 13 |
| 6. | The Late Mrs. F. C. Daniel | — | 17 |
| 7. | Crossed Over | — | 19 |
| 8. | Mrs. M. M. Ariyanayagam | — | 21 |
| 9. | திரு. இ. சிற்றம்பலம் | — | 23 |
| 10. | திரு. சு. குமாரசுவாமி | — | 25 |
| 11. | புதுமையும் பெண்ணுரிமையும் | — | 28 |
| 12. | அனற்பிழம்பே என் முடிவு | — | 33 |
| 13. | மின்சாரமும் மனிதவாழ்வும் | — | 35 |
| 14. | அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு | — | 38 |
| 15. | வாழ்க்கைப்பாதையிலே | — | 40 |
| 16. | நான் விரும்புவது ஆசிரியக் கலையே | — | 42 |
| 17. | கல்வி | — | 44 |
| 18. | எனிய வாழ்க்கையும்—— அருமையும் | — | 47 |
| 19. | போர்கள் மனிதனின்..... எழுப்பப்படல் வேண்டும் | — | 52 |
| 20. | இயற்கை இன்பம் | — | 57 |
| 21. | My little Sister | — | 59 |
| 22. | My Hobby | — | 60 |
| 23. | A National Hero | — | 61 |
| 24. | My Favourite Holiday Spot | — | 62 |
| 25. | U N O | — | 64 |
| 26. | A Prayer | — | 65 |
| 27. | Why we should read | — | 66 |
| 28. | Sports Review | — | 67 |
| 29. | House Reports—Chelliah House | — | 71 |
| | —Navaratnarajah House | — | 72 |
| | —Peto House | — | 73 |
| | —Whitney House | — | 74 |

30. Prefects' Guild — 76
31. S C M — 78
32. Girl Guides — 79
33. எமது சாரணர் — 80
34. குருளையர் — 81
35. இந்து மாணவர் மன்றம் — 83
36. கூட்டுறவுச் சிக்கனக் கடன் சங்கம் — 85
37. மாணவர் கூட்டுறவுச் சங்கம் — 86
38. உயர்தர மாணவர் மன்றம் — 88
39. வேலை அனுபவக் கழகம் — 90
40. ஆசிரியர் கழகம் — 91
41. பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை — 93
42. G. C. E. O/L Credits and distinctions — 95
43. G. C. E. A/L Results — 97
44. Wedding Bells — 98
45. Obituary — 98
46. Navaratnarajah Memorial Fund — 99
47. Old Students' Appointments & Promotions — 100

# PRINCIPAL'S NOTES

1970 has seen several changes in the school. The number of students in this College has been kept constant at 1100 due to lack of accommodation. Admissions for 1971 have been completed. A new feature of 1971 admissions is the formation of a Janata Committee of 9 that has been responsible for admissions. Hundreds of students sought admission. Only 144 have been given admissions for 1971. Of these 80 were admitted to Grade 1.

A start has been made in providing New buildings. The Government gave a grant to replace old roofs. Two sheds were demolished and a new block — 105′ × 26′—was put up. The grant would have been insufficient to complete the buildings but for the Shramadana work of students, old boys and parents. In addition all the palmyrah rafters required were donated by parents. Construction work on the New Science block will begin early in 1971. A plan of the New Science block appears in the Magazine. This block is expected to cost over Rs. 200,000/-. This project is to be financed from the Navaratnarajah Memorial Fund. Some Old Boys and parents have given liberal contributions towards this project.

The Annual Prize Giving was held in March with Mr. C. Balasingam, the former Permanent Secretary, Ministry of Health as Chief Guest. Dr. S. Arulpragasam M. S. General Hospital, Jaffna, was the Chief Guest at the Inter House Athletic Meet held in June.

Public Examination results were very encouraging. At the J. S. C. (N. P. T. A.) Examination 27 passed with 2 in the First Division. At G. C. E. (A L.) Examination 1969 9 sat and 5 entered the University. In the 1969 G. C. E. (O. L.) Examination 53 passed in 5 or more subjects.

In Sports and Athletics our students have participated in all

Inter College Meets. As usual we participated in the Inter Collegiate Meets in Hockey, Volley ball, Soccer and Netball. In Basket ball no Inter Collegiate Matches were held. In Athletics our boys won places in the Zonal Meet. 3 were qualified for the Ceylon Schools Athletic Meet. S. Selvarajah was well placed in the 80 metres Hurdles.

Our Scout Troop was very active this year. At the District Rally our Troop came fourth and 5 passed out as Queen's Scouts. The Wolf Pack had done extremely well. It obtained 1st place in the Annual Cubs District Rally winning the coveted "Totem Pole" award for 1970. The Girls Guides too have been active this year.

Agriculture has been given its due place in the curriculum. It is taught as a class subject. On the practical side students have successfully cultivated Potatoes, Chillies and Onions. The Dept. of Agriculture has given us advice and supplied us seeds and fertiliser.

The school library has expanded considerably. New furniture has been provided. A full time Librarian is in charge.

The school Co-op. Society has been successfully running the Book Depot, Hostel and Canteen. The construction of the new classrooms at a cost of Rs. 22,000/- has been succesfully completed by the society. All school repairs and furniture repairs are undertaken by this society. A full time Manager is in charge. In 1966 it made a profit of Rs. 1529/66

The O. B. A. Colombo Branch has been very active. It had its Annual General Meeting in November. It is hoped that all past students in Colombo will give a helping hand to make its activities a success.

In the course of this year two of those who were closely connected with the school passed away. Mrs. R. R. Solomons the Head Mistress and Asst. teacher of this College for 29 years passed away after a brief illness. She had been responsible for building up the Junior section.

of the college. At all times she had given her unstinted co-operation in running the school. Several thousands of students who have passed through her hands will remember her with gratitude for all her services.

Mr. A. G. Rajaratnam our History master passed away after a sudden heart attack. He has been on the staff for 1½ years. His good-naturedness and sociability has endeared him to the staff and students.

We convey our deep sympathies to all members of these families.

During the year there were new additions to the staff. Mr. A. Nadarajah (Tamil Trained) Miss P. Nagasundaram (English Special Trained) Mrs. E. S. Lewis (Agricultural Trained) and Mr. S. Ratnarajah, B. A. (Cey.) joined the staff. I welcome them to the school.

In February this year Mrs. A. Murugesu 1st Class Tamil Trained went on transfer. She was the mainstay of the Lower school. In December under the 55 retirement rule three teachers retired. Mrs. M. M. Ariyanayagam B. A. retired after 17 years of service in this college. She has taught English and History in the upper classes. Mr. S. Sittampalam 1st class certificate – has taught Tamil & Religion in the G. C. E. (O. L.) classes. He retires after 7 years of service in this College. Mr. S. Kumarasamy, 1st class English Trained was transferred here last year. He has served for several years in Government schools. He has been quite a successful teacher of English and Tamil in G. C. E. (O. L.) classes. Mr. M. Chinniah, 1st class Tamil Trained, is leaving at the end of the year to assume duties as Head Master of a school. I thank all these teachers for their valuable service to the school.

In conclusion I wish to thank all members of the staff and office staff for the co-operation extended to me in all the College activities.

# தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றே? சொல்லீர்!
மதமதுரத் தமிழ்மோனை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்ஒரு சொற்கேளீர்!
சேமமுறவேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டுநல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்
இறவாதபுகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாகநமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமானபுலமையெனில் வெளிநாட்டோர் அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல்கலைப்பெருக்கும்கவிப்பெருக்கும்மேவுமாயின்
பள்ளத்தில்வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவிகொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக்கண்டார்.

— மகாகவி சுப்பிரமணியபாரதியார்

# எழுத்தின் வகைகள்

எழுத்துக்களை, முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகையுள் அடக்கலாம். இவை ஒவ்வொன்றும் பல்வேறு வகையன. முதலெழுத்து, உயிரெழுத்து, மெய்யெழுத்து (ஒற்றெழுத்து) என வேறுபடும். உயிரெழுத்து, குற்றெழுத்து, நெட்டெழுத்தென மாத்திரையளவை நோக்கியும்; மெய்யெழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என ஓசை நோக்கியும் வெவ்வேறு வகையினவாக வகுக்கப்பட்டுள்ளன. குற்றெழுத்திற்கு மாத்திரையொன்று. நெட்டெழுத்துக்கு மாத்திரையிரண்டு. மெய்யெழுத்திற்கு மாத்திரை அரை. மாத்திரை ஒன்றின் அளவு கண்ணிமைப்பொழுதளவு அல்லது கை நொடிப்பொழுதளவாகும்.

முதலெழுத்துக்கள் 30

உயிரெழுத்து 12

| குற்றெழுத்து | நெட்டெழுத்து |
|---|---|
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| — | ஐ |
| ஒ | ஓ |
| — | ஔ |
| — | — |
| 5 | 7 |
| — | — |

மெய்யெழுத்து 18

| வல்லினம் | இடையினம் | மெல்லினம் |
|---|---|---|
| க் | ய் | ங் |
| ச் | ர் | ஞ் |
| ட் | ல் | ண் |
| த் | வ் | ந் |
| ப் | ழ் | ம் |
| ற் | ள் | ன் |
| — | — | — |
| 6 | 6 | 6 |
| — | — | — |

முதலெழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் என அழைக்கப்படும். சார்பெழுத்துக்கள்பற்றி இலக்கணநூலாசிரியர்களிடத்தில் கருத்து வேறுபாடுண்டு. தொல்காப்பியர் மூன்று சார்பெழுதுக்களைக் கூற, நன்னூலார் சார்பெழுத்தின் வகை பத்தெனவும் அவற்றின் தொகை முந்நூற்று அறுபத்தொன்பதெனவுங் கூறுவர். தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றுமாகும். நன்னூலார் குறிப்பிடுவன பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | உயிர்மெய் | 216 |
| 2. | முற்றுயிர்தம் | 8 |
| 3. | உயிரள பெடை | 21 |
| 4. | ஒற்றள பெடை | 42 |
| 5. | குற்றிய லிகரம் | 37 |
| 6. | குற்றிய லுகரம் | 36 |

| | | |
|---|---|---|
| 7. | ஐகாரக் குறுக்கம் | 3 |
| 8. | ஔகாரக் குறுக்கம் | 1 |
| 9. | மகரக் குறுக்கம் | 3 |
| 10. | ஆய்தக் குறுக்கம் | 2 |
| | | 369 |

**உயிர்மெய் :-**

மெய்யெழுத்துக்கள் தனித்து இயங்கமாட்டா. அவை உயிர் எழுத்துடன் கூடி அல்லது அவற்றுடன் ஒன்றுகச் சேர்ந்து வடிவொழிந்தே இயங்கும். மெய்யெழுத்து உயிரெழுத்துடன் ஒன்றுகச் சேர்ந்து வடிவொழிந்துஒரெழுத்தாகஇயங்குவதே உயிர்மெய்யெழுத்து என்ப்படும். ''க்'' என்பது மெய்யெழுத்து. இதனுடன் ''அ'' என்ற உயிர் எழுத்து சேர்கின்றபொழுது அதன் வடிவம் மாறி ''க'' வடிவமாக உருப்படுகிறது. இப்படி மாறிய ''க'', உயிர்மெய் யெழுத்தாகும். எனினும் உயிரெழுத்துக்குரிய ஒலியும், மெய்யெழுத்திற்குரிய ஒலியும் மாற்றமடையவில்லை. ''க்'' என்ற வல்லின ஓசையும், ''அ'' என்ற ஓசையும் மாற்றமடையவில்லை. எல்லா உயிர்மெய் யெழுத்துக்களிலும், மெய்யெழுத்தின் ஒலி முன்பும், உயிரெழுத்தின் ஒலிபின்பும் உச்சரிக்கப்படும். ''க'' என்ற உயிர்மெய்யில் ''க்'' என்ற ஒலி முன்பும் ''அ'' என்ற ஒலி ஈற்றிலும் உச்சரிக்கப்படுவதை நோக்குக.

உயிர் எழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டுடனுஞ் சேர்ந்து வருதலால் (12×18) உயிர் மெய்யெழுத்து 216 ஆகும். (ஆனால் எல்லா எழுத்துக்களும் எழுத்து வழக்கிலில்லை) இவற்றிற்குதாரணமாக உயிரெழுத்துப் பன்னிரண்டும் ''க்'' என்ற மெய்யெழுத்துடன் சேர்வதால் உண்டாகும் விளைவை நோக்குக.

க் + அ = க
க் + ஆ = கா
க் + இ = கி
க் + ஈ = கீ
க் + உ = கு
க் + ஊ = கூ
க் + எ = கெ
க் + ஏ = கே
க் + ஐ = கை
க் + ஒ = கொ
க் + ஓ = கோ
க் + ஔ = கௌ

# உயிர்மெய்யெழுத்துக்களின் விரிவு

| உயிர் / மெய் | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | கு | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ஙு | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | சு | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞு | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | டு | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ணு | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | து | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | நு | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | பு | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | மு | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ற் | று | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | னு | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| ய் | யு | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ரு | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | லு | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வு | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ள் | ளு | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ழ் | ழு | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| | 18 | 36 | 54 | 72 | 90 | 108 | 126 | 144 | 162 | 180 | 198 | 216 |

**முற்றுய்தம் :-**

ஃ என்ற ஆய்த எழுத்தை தனி நிலையெனவுங் கூறுவர். இது, உயிர் மெய் எழுத்துக்களைப்போல ஒன்று டன் இணைந்துவராது. இதற்கென இன எழுத்து மில்லை. ஆய்த எழுத்து குற்றெழுத்தை முன்னதா யும் உயிர்மெய் வல்லெழுத்தைப் பின்னதாயுங் கொண்டு இரண்டிற் கும் நடுவிலே தோன்றும். இதற் குரிய மாத்திரை அரை. இம்மாத் திரையளவிலிருந்துங்குறுகிஒலிக்காத ஆய்தவெழுத்து முற்றுய்தம் எனப் படும்.

உதாரணம்:— அஃது, இருபஃது

**ஆய்தக்குறுக்கம் :-**

குற்றெழுத்தின் பின்னே நிலை மொழியீற்றிலுள்ள, லகார, ளகா ரங்கள் வல்லெழுத்துக்கள் வந்து சேருகின்றபொழுது ஆய்தமாக மாறும். அவ் ஆய்தம் முற்றுய்தத் திற்குரிய அரை மாத்திரையளவு ஒலிக்காது கால் மாத்திரையளவில் ஒலிப்பதால் **ஆய்தக்குறுக்கம்** என அழைக்கப்படும்.

உதாரணம்: கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

**உயிர்ளபெடை :-**

பாட்டிலே ஓசை குறையுமிடத்து நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக் குரிய மாத்திரையளவிலிருந்தும் நீண்டு ஒலிக்கும். இத்தன்மை மொழிக்கு, முதல், இடை, கடை ஆகிய மூன்று இடத்தும் வரும். அவ்வாறு வருகின்றபொழுது அவ் வவற்கினமாகிய குற்றெழுத்துக்கள் அறிகுறியாக சேர்த்து எழுதப்படும்.

உதாரணம் :

மொழிக்கு முதல் — ஆடை — ஆஅடை
மொழிக்கு இடை — உரூர்க் — உரூஅர்க்
மொழிக்கு கடை — பலா — பலாஅ

பாட்டிலே ஓசை குறையாத விடத்தும் முதற் கூறியவாறு அள பெடுப்பதுண்டு. இது இரு வகைப் படும். ஒன்று இன்னிசை அள பெடை. மற்றது சொல்லிசை அள பெடை. இன்னிசை அளபெடை யென்பது குற்றெழுத்து நெட்டெ ழுத்தாக நீண்டு பின் அளபெடுப்ப தாகும்.

உதாரணம் :

''கொடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுங்கே'' என்பதில் ''கொடுப்பதூஉம்'' என்ற சொல் லில் உ என்ற குற்றெழுத்து அள பெடுத்ததைக் காணலாம்.

(கொடுப்ப (த் உ) ம். = கொடுப்ப (த் + ஊ) ம். = கொடுப்ப (த் + ஊ உ) ம். = கொடுப்பதூஉம்.

சொல்லிசை அளபெடையென் பது பெயர்ச்சொல் வினைச் சொல் லாக மாறி அளபெடுப்பதாகும்.

''உரனசைஇ யுள்ளந் துணை யாகச் சென்மோர்'' என்பதில் ''உர னசை'' என்ற பெயர்ச் சொல்லி லுள்ள ஐகாரம் இகரத்தைப்பெற்று அளபெடுத்தது.

உரன (ச் ஐ) = உரன (ச்ஐஇ)
= உரனசைஇ

உரனசை என்ற பெயர்ச்சொல் உரனசைஇ என அளபெடுத்ததால் வினைச்சொல்லாக மாறியது.

நெட்டெழுத்திற்கு மாத்திரை யிரண்டு. குற்றெழுத்திற்கு மாத் திரை ஒன்று. எனவே உயிரளபெ டைக்கு மாத்திரை மூன்று. சில இடங்களில் இம்மாத்திரையளவி லிருந்து நீண்டு ஒலிப்பதும் உண்டு.

**ஒற்றளபெடை :-**

பாட்டிலே ஓசை குறைந்த விடத்து குற்றெழுத்தின் பின் வரு கின்ற, ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ ஆகிய பதினெரு ஒற்றெழுத்துக்களும் (மெய்) தம்மாத்திரையளவிலிருந்தும் மிக்கு ஒலிக்கும். அதற்கு அடையாளமாக அவ்வெழுத்து மீண்டும் எழுதப் படும். ஒற்றெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வராதாகையால் இவ்வாறு அளபெடுத்தல், மொழிக்கு இடை யிலுங், கடையிலுமே நிகழும்.
மொழிக்கு இடை—விலஃகி—விலஃஃகி
மொழிக்கு கடை—அங்—அங்ங்

ஆய்தவெழுத்து மொழி இறுதியி லும் வராதாதலால் ஆய்தம் மொழி யிறுதியில் அளபெடுப்பதில்லை. ஒற் றளபெடைக்கு மாத்திரை ஒன்று.

**குற்றியலுகரம் :-**

தனிக் குற்றெழுத்துந் தனியுயிர் மெய்க் குற்றெழுத்தும் அல்லாத எழுத்துக்களின் பின்னே வல்லெழுத் துக்களின் மேலேறிவரும் உகரம் குற்றியலுகரமாகும்.

உகரம் ஏறிய வல்லெழுத்துக்கள் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறுமாகும். எனவே குற்றியலுக ரச் சொற்களின் ஈற்றெழுத்து இவற் றில் ஒன்றையுடையதாயிருக்கும்.
உதாரணம்:— ஏகு, காசு, பொட்டு, பொத்து, தப்பு, தேற்று.

அடு என்பதில் ஈற்றெழுத்து உகரமேறிய வல்லெழுத்தாகவிருப் பினும் அ என்ற தனிக்குற்றெழுத் தோடு மாத்திரம் சேர்ந்து வந்த தால் அது குற்றியலுகரமல்ல. விடு என்பதிலும் ஈற்றெழுத்து உகரமே றிய வல்லெழுத்தாக இருப்பினும் வி என்பது (வ்இ) தனி உயிர்மெய் யாக இருப்பதனால் இது குற்றிய லுகரமல்ல. ஆடு என்பதில் ஈற் றெழுத்து உகரமேறிய வல்லெழுத் தாக இருப்பதுடன் முதலில் உள்ள ஆ என்ற எழுத்து தனிக் குற்றெ ழுத்தாகவோ அன்றி தனி உயிர் மெய்க் குற்றெழுத்தாகவோ அல்லா மல் தனியொரு நெட்டெழுத்தாக இருப்பினும் இவ்வாக்கியம் குற்றிய லுகரமாகும். கடுகு என்பதில் ''கு'' என்ற எழுத்தின் முன் ''டு'' என்ற உயிர்மெய்க் குற்றெழுத்து இருந்தா லும் அது தனித்து வராது. ''க'' என்ற உயிர்மெய்க் குற்றெழுத் தோடு சேர்ந்து வந்ததால் இச்சொல் குற்றியலுகரமாகும்.

புணரியலிலே எடுத்தாளும் பொருட்டு குற்றியலுகரம் ஆறு வகையாக்கப்படும். மொழியினிறுதி யில் வருகின்ற உகரமேறிய வல் லெழுத்துகட்கு முன்னுள்ள எழுத் துக்களின் இன அடிப்படையில் இப் பகுப்புக்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

அவை, வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்பனவாம்.

உதாரணம்:—

வன்றொடர்:— நக்கு என்பதில் ''கு'' என்ற உகரமேறிய வல்லினம் ''க்'' என்ற வல்லெழுத்தைத் தொடர்ந்து வந்தால் இது வன்றொடர் குற்றியலுகரம்.

மென்றொடர்:— பிஞ்சு என்பதில் ''சு'' என்ற உகரமேறிய வல்லினம் ''ஞ்'' என்ற மெல்லெழுத்தைத் தொடர்ந்து வந்ததால் இது மென்றொடர் குற்றியலுகரம்.

இடைத்தொடர்:— செய்து என்பதில் ''து'' என்ற உகரமேறிய வல்லினம் ''ய்'' என்ற இடையெழுத்தை தொடர்ந்து வந்ததால் இது இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

ஆய்தத்தொடர்:— எஃகு என்பதில் 'கு' என்ற உகரமேறிய வல்லினம் ''ஃ'' என்ற ஆய்தவெழுத்தை, தொடர்ந்து வந்ததால் இது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

உயிர்த்தொடர்:— தரகு, பலாசு என்பவற்றில் கு, சு ஆகிய உகரமேறிய வல்லினம் எழுத்துடன் முறையே அ (ர்அ) ஆ (ல்ஆ) ஆகிய உயிரெழுத்துக்களைத் தொடர்ந்து வந்ததால் இவை உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களாகும்.

நெடிற்றொடர்:— ஆறு என்பதில் ''று'' என்ற உகரமேறிய வல்லினம் தொடர்ந்து வரப்பட்ட ஆ என்ற நெட்டெழுத்து உயிர் எழுத்தாக இருப்பினும் புணர்ச்சி விதியிலே பலாசு என்பது போன்ற குற்றியலுகரங்கள் பெறுகின்ற விதியிலும் பார்க்க இவ்வாறு தனித்து நெட்டெழுத்தோடு வருகின்ற குற்றியலுகரம் வேறு விதி பெறுவதனால் இதையும் ஒரு பிரிவாக வகுக்கவேண்டியுள்ளது. நெடிற்றொடர் என்கிற பொழுது தனித்து உயிர்மெய் நெட்டெழுத்தின்பின் வல்லினத்தில் ஏறி வருகிற உகரமும் அடங்கும். கோடு என்பதில் கோ (க் ஓ) என்பது உயிர்மெய் நெட்டெழுத்தாகும்.

குற்றியலுகரத்திற்கு மாத்திரை அரை.

## குற்றியலிகரம்:-

யகரம் மொழிக்கு முதலிலே வந்து குற்றியலுகரத்தோடு புணரும்போது இகரமாக மாறும்.

உதாரணம்:

நாக்கு (க்உ) + யா (ய்அ) து = நாக்கி (க்கி) யாது

வண்டு (ட்உ) + யா (ய்ஆ) து = வண்டி (ட்இ) யாது

மியா என்ற அசைச்சொல்லில் மகரத்தில் (ம்) ஏறிய இகரமும் குற்றியலிகரமாகும்.

குற்றியலிகரத்திற்கு மாத்திரை அரை.

**ஐகாரக்குறுக்கம் :-**

ஐகாரம் மொழிக்கு, முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வருகின்றபொழுது தன் மாத்திரை யளவினின்றும் குறுகும். எனவே ஐகாரத்தை சொற்களில் சேர்க்காது தனித்துக் கூறுகின்றபொழுது குறுகாது.

உதாரணம்:— ஐப்பசி, இடையன், குவளை.

ஐகாரக்குறுக்கத்திற்கு மாத்திரை ஒன்று.

**ஔகாரக்குறுக்கம் :-**

ஔகாரம் மொழிக்கு முதலில் மாத்திரம் குறுகும். இதை சொற்களில் சேர்க்காது. தனித்துக் கூறுகின்றபொழுது குறுகாது.

ஔகாரக் குறுக்கத்திற்கு மாத்திரை ஒன்று.

**மகரக்குறுக்கம்:-**

ண், ன் ஆகிய எழுத்துக்களின் பின்பு வருமொழி முதலில் வ என்ற எழுத்து வரும்பொழுதும் மகரம் குறுகும்.

உதாரணம்:— மருண்ம், போன்ம், தரும் வ(வ்அ)ளவன்.

மகரக்குறுக்கத்திற்கு மாத்திரை கால்.

இதுவரை கூறப்பட்ட எழுத்துக்களின் வகைகளைவிட வேறு வகைகளும் உள. அவை, வினைவெழுத்துக்கள், சுட்டெழுத்துக்கள், இனவெழுத்துக்கள் என்பனவாகும்.

**வினைவெழுத்து :-**

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்து எழுத்துக்களும் வினைவெழுத்துக்களாகும். எ, யா என்பன மொழிக்கு முதலிலும் (எவன்?, யாவன்?), ஆ, ஓ என்பன மொழிக்கு ஈற்றிலும் (அவனை?, அவனே?), ஏ மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் (ஏன்?, அவனே?) வினைவெழுத்துக்களாக வரும்.

**சுட்டெழுத்து :-**

அ, இ, உ ஆகிய மூன்று குற்றெழுத்துக்களும் சுட்டெழுத்துக்கள் எனப்படும். இவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வந்து தூரஞ் சம்பந்தமான பொருளை ஒருவர் இன்னொருவருக்குக் குறிப்பிட்டுக் காட்டப் பயன்படும். அகரம் தூரத்திலுள்ள பொருளையும் (அப்பொருள்) இகரஞ் சமீபத்திலுள்ள பொருளையும் (இப்பொருள்) உகரம் நடுவிலுள்ள பொருளையுஞ் (உவன்) சுட்டிக்காட்டப் பயன்படுகின்றன.

**இனவெழுத்து :-**

உயிரெழுத்துக்களில் நெட்டெழுத்துக்கட்கு குற்றெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களில் வல்லெழுத்துக்கட்கு மெல்லெழுத்துக்களும் இனவெழுத்துக்களாக உள. இவை முறையே அளபெடையிலும் புணர்ச்சியிலும் அவ்வவற்றிற்குப் பயன்படுகின்றன.

உதாரணம்:—

| | |
|---|---|
| ஆ — அ | க் — ங் |
| ஈ — இ | ச் — ஞ் |
| ஊ — உ | ட் — ண் |
| ஏ — எ | த் — ந் |
| ஓ — ஒ | ப் — ம் |
| ஐ — இ | ற் — ன் |
| ஔ — உ | |

# தமிழ்ச் சோலை

குயில் பாட, மயிலாட, மான்கன்று துள்ளிவர,
இளம் தென்றல் மனியினை வருடிச் செல்ல,
தென்றலுடன் கலந்து வந்த மலரின் மணம் என்
நாசியினைத் துளைத்துக் கொண்டு உள்ளே செல்ல,
வண்டினங்கள் போதையுடன் என்மீது மோத,
மலர்கள் எல்லாம் அசைந்தாடி எனை வரவேற்க,
முழு நிலவின் ஒளி எனக்கு வெளிச்சமதாக,
எனை மறந்து சோலைதனில் சென்றேன் நானும். 1

மலைமகளின் அந்தப் புரம் அதுவோ என்று,
ஐயுற்ற வண்ணம் நான் நடந்து செல்ல,
தென்றலுடன் கலந்து வந்த தெள்ளு தமிழ் ஓசை
என் செவி நரம்புகளை சிலிர்க்கச் செய்ய,
குரல் வந்த திசை நோக்கி சென்றேன், அங்கே
குறுமுனிவன் அகத்தியனும் பெருமுனிவன் வள்ளுவனும்
சங்கமித்திருக்கும் காட்சி எனை
மெய் சிலிர்க்க வைத்ததுவே. 2

நேத்திரத்தில் பிழையோ என்றை யுற்றவண்ணம்
கைகளினால் ஒருமுறை கசக்கிப் பின்னர்,
மீண்டும் ஒரு முறை உற்று நோக்கி,
ஐயுற் றெளிந்து அவர்கள் அருகே சென்று
குறுமுனிவன் அகத்தியனைக் குறும்பாகப் பார்த்து
குட்டையனே எப்படித் தமிழிற்கு,
இலக்கணம் செய்தாய் என்று கேட்டு
இறுமாந்து நின்றேன் நான் அவனைப் பார்த்து, 3

பொங்கி வந்த புன்னகையைப் பொத்தென்று அடக்கி
குழந்தாய் நீ அறியாப் பிள்ளை, உனக்கது புரியாதென்று
தன் குறுகிய வாயினால் பகர்ந்திடவே,
குழந்தையா நான்? என்று எனக்குள்ளே கேட்டு,

கோப மாக அவனைப் பார்த்துப் பின்
வள்ளுவனை நோக்கி.
இரண்டு வரி கொண்டு வாழும் வழிகாட்டிய
உன் பேரறிவை எனக்குப் புகட்டிவிடு என்றேன்

அகத்தியன் பகன்றிட்ட அரியதமிழ் வார்த்தையினை
வள்ளுவனும் பகன்று நிற்க
பொங் கிவந்த பெருஞ் சினத்தை வெளிக்காட்டிக் கொள்ளாது
அவ்விடத்தை விட்டகன்று அப்பாற் செல்ல அங்கே
கம்பனும் பாரதியும் கலந்துரையாடக் கண்டு
கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்க
களிப்பெரு மூவகை நெஞ்சிலே பூக்க
கடிதில் அவர்களை அடைந்தேன் நானும்

வானை அளப்போம் கடல்மீனை அளப்போம்
என்று கனாக் கண்டாயே
இன்று உன்கனவெல்லாம் நனவாகும் காட்சியை
காண்பதற் கொருமுறை புவியில் நீ அவதரித்து
அங்கே நடந்திருக்கும் விஞ்ஞானக் காட்சியையும்
தமிழ் அன்னைக்கு நேர்ந்திருக்கும் தாங்கொணு குறையையும்
பார்க்காமல் இங்கு பள்ளி கொள்கிறுயே
என்றேன் நான் பணிவுடன் பாரதியைப் பார்த்து

கள்ளமில்லா உள்ளத்தோனே வெளுத்த தெல்லாம் பாலல்ல
இன்றைய மானிடர்கள் இரக்கமில்லா நெஞ்சத்தினர்
அன்பு. பண்பு அறவே தெரியாதவர்
அவர்களிடையே எனை அழைத்து அவமானப் படுத்தாமல்
உன்வழியே சென்று வா உண்மையுள்ள தமிழ்மகனே
எனப் பகன்று நின்முன் தாடிமுகத்தோன் பாரதி
அவனது சொல்லை ஆதரிப்பான் போன்று அருகிருந்த கம்பனும்
ஆட்டினன் சிரத்தினை குறுநகை யொன்றுடன்

அதற்கு மேல் அவ்விடத்தில் நிற்க மனமில்லாது
அப்பாலே நான் நடந்து சிறிது தூரம் செல்ல அங்கு
ஓளவைக் கிழவியுடன் ஆனைமுகனும் அவன்தம்பி சரவணனும்
ஆடிப்பாடும் அரியதோர் காட்சி கொண்டு

உள்ளங்குளிர சென்றேன் அவர்களண்டை
கூட்ட பழத்திற்கு சுவையான விளக்கம் தந்த
தமிழ்க்குமரன் முருகனுடனும் ஔவைக் கிழவியுடனும்
ஆசைதீர அளவளாவி அகன்றேன் நான் அவ்விடத்தைவிட்டு

அப்பாலே போகாது அவ்வளவுடன் யான்திரும்பி
சோலையின் வாயிலுக்கு சோர்வுடன் வந்து
பிரிய மனம் இல்லாது திரும்பி நின்று
சோலையின் வாயிலை நோட்டம் விட்டேன் ஒருமுறை
இரத்தினத் தகடொன்றின் மீது பொன்னெற் பொறிக்கப்பட்ட
தமிழ்ச்சோலை என்ற வார்த்தை மின்னியது கண்டு
நான் சென்றது தமிழ்ச் சோலை என்றறிந்து
ஆற்றொணா மகிழ்ச்சியால் அம்மா என அலறினேன்.

எனடா மகனே எனை அழைத்தாய்?
என்று என் அன்னை எனை வந்து வினவ,
கண் விழித்துப் பார்க்க என் கண்களிற்கு முன்னே
அன்னையும் சோதரியும் நிற்பது கண்டு,
நான் கண்டது கனவென்று அப்போது தானுணர்ந்து
உனது கனவை ஆவலுடன் இருவருக்குஞ் சொல்ல
தமிழ் மகள் என்ற தனிப்பெரும் பட்டமொன்றை
எனக்களித்து விட்டனர் அவர்கள் இருவருமே.

ஜ. வேராசா
(12. விஞ்.)

கல்விக் கழகு கசடற மொழிதல்
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை

— அதிவீரராம பாண்டியர்

# வள்ளுவர் அருளிய வாழ்வுக்கலை

தெள்ளிய கருத்துக்களின் தேக்க மாய் வள்ளுவரின் திருக்குறள் வாழ் வுக்கலையாக விளங்குகின்றது. ''மத மென்ற போக்கால் மக்களிடையே மாற்றங்கள்; சாதி என்ற பிரிவால் சல்லடைக்கண்கள்'' போன்ற வேற் றுமைகள் நிலவும் இந்நாளில் வாழ்க் கையென்ற அடிப்படையில் நெறிகள் பொறிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எண்ணம் வேரூ ன்றினால் 'மக்கள் வாழ்வும் வளமும் பெறுவர்' என்ற கருத்தில் திருக்குற ளிலே வள்ளுவர் வாழ்வைக் கலை யாக்கியுள்ளார்.

ஆணும் பெண்ணும் அன்பொ ழுக நடாத்தும் வாழ்வே இல்வாழ்க் கை. ''இல்லாள் அகத்திருக்க இல் லாத தொன்றில்லை'' என்பதற்கி ணங்க வள்ளுவர் வாழ்க்கைத் துணை விக்கு ஏற்றம் அளித்துள்ளார். இல் லற வாழ்வில் மகளிர்க்கு வேண்டியது நிறையே ஒழியச் சிறையன்று. உரி மையோடு வாழவேண்டியவர்கள் தான் பெண்கள் என்பதை வள்ளுவர்

''சிறைகாக்குங்காப்பெவண் செய்யும்மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை''

என உரிமைப்பாதையை வகுத்தார். அதாவது நிறையாலே தம்மைக் காத்து குடும்பத்தைப் பெருமை குறையாமல் போற்றும் பண்பே தேவை என்பதாம்.

பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக் கும் நிறைவுடைமை தேவை என் பதை வள்ளுவர்;

''அறனியலான் இல்வாழ்வான் என் பான் பிறனியலாள் பெண்மை நயவாதவன்'' எனக் கூறினர். பிறர் மனை நோக்காத பேராண்மை யுடையவனாய் வாழ்ப வனே உண்மை வாழ்வை நடாத்து பவனாகும் என்றார்.

மேலும் வாழ்வுக்கேற்ற பண்பு களில் அன்பு ஒன்றுதான் பண்புடை யது என்ற எடுகோளை எடுத்த வள் ளுவர், ''அகத்தில் அன்பு தோன்றில் அகந்தையைக் களைந்து அவனியில் வாழ்வை வளமாக்கிக்கொள்ள முடி யும். அகத்தின் பண்பின் முதற்படி அன்பு. தன்னலம் ஒன்றினையே நாடு வதைத் தவிர்த்து பிறரும் வாழவேண் டும் என்ற நோக்கத்தை உண்டாக்கு வது அன்பு'' என வர்ணித் துள்ளார்.

இல்வாழ்வை இனிது நடாத்திப் பயன் பெற்றபின் ஏற்க வேண்டிய பொது நல நெறியானது துறவு நெறி யாகும். வாழ்வில் முதனிலை இல்லற மாகிய தொடர்பு நெறியாகும். அடுத்த நிலை அத்தொடர்பை அகற்றி அறிவாக்கப் பணி புரிய வேண்டிய துறவு நெறியாகும். அன்பு இல்லறத்

தானுக்கு அமையவேண்டுவதுபோல அருள் உடமை துறவறத்தாருக்கு பொருந்தியிருக்க வேண்டுமென்பது ''அருள் என்னும் அன்பு ஈன் குழவி'' என்பதனால் பெறப்பட்டது.

மேலும் வள்ளுவர், துறவிக்கு தேவையானது ஐம்புலப்பற்றையும் அறவே நீக்குவதற்குப் பற்றற்ற தன்மையும் நோன்பும் வேண்டும் என்று கூறியதுடன் தன்னலத்தை நாடுவதைநீக்கி பொதுநலத்திற்புக துறவு நெறியைக் காட்டியுள்ளார்.

அடுத்து வள்ளுவர் ''மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி'' என வாழ்வுக் கலைக்கு உயர் நிலை என்பதைக் கூறியுள்ளார். மனமேவாழ்வுக் கட்டிடத்தை எழுப்புதற்குரிய அத்திவாரம், இதுபழுதாயிருந்தால் மேலெழும்பும் கட்டிடம் எவ்வளவு எழிலுடையதாகஇருந்தாலும்பயனென்ன? வாழ்வில் பெருமையும் சிறுமையும் வரினும் ஆற்றும் கடமையை ஆற்றுது அயரேன் என்ற உள்ளத்துணிவினும் பெரிய பெருமை வேறொன்றும் இல்லை. அத்துடன் வள்ளுவர் மக்கள் மக்களாக வாழ கல்வி வேண்டும் என்றும் ஒருவருக்கு ஊறு நேர்ந்த விடத்து அதை விலக்க மக்களிடம் இரக்கமும், வேண்டும் எனறு கூறியுள்ளார்.

பொதுவாக வள்ளுவர் குரல் வாழ்க! வாழவிடுக! என்ற நாதத்தையே அளிக்கின்றது

**செல்வி. சற்குணலீலா நவரட்னம் 9. B**



## இசைப்பொறி மனிதர்

சிலர் இடையிடின்றி தூல்களைப் பயின்றவண்ணம் இருப்பர். ஆனால் அவரது நூற்புலமைக்கும் வாழ்வுக்கும் எவ்விதத் தொடர்பும் நேர்வதில்லை. இவரை இசைப்பொறிக்கு ஒப்பிடலாம்.

— மணிமொழி

**The Late Mrs. R. R. Solomons**

*Head Mistress*

*1–1–41 — 26–3–70*

# திருமதி ஆர். ஆர். சொலமன்ஸ்

## எங்கள் பெரிய உபாத்தியாயர்

"நெருநலுள னொருவ னின்றில்லை
யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு".

எங்களோடு கூடக் கற்பித்து, எம்மோடு பேசிப்பழகி இன்புற்ற எங்கள் பெரிய உபாத்தியாயர் இன்று எங்களோடு இல்லை. அம்மா என்று அன்புமொழி பேசும் செல்வமகன் "சாம்" இன் அம்மா அவனோடு இல்லை; பெரிய உபாத்தியாயர் என்று பெருமதிப்போடு கூறும் மாணவர்களுடைய பெரிய உபாத்தியாயர் இன்று அவர்களுடனும் இல்லை. அவர் எங்கள் எல்லாரிலும் பார்க்கக் கூடுதலாக யாரை நேசித்தாரோ யாருடைய நாமத்தை அல்லும் பகலும் அநவரதமும் உச்சரித்தாரோ, யாருடைய நாமத்துக்காக இவ்வுலகில் வாழ்ந்தாரோ அந்த ஆண்டவன் அவரை எங்கள் எல்லோரிடமும் இருந்து பிரித்துத் தன்னோடு அணைத்துக்கொண்டார். துன்பம் நிறைந்த இவ்வுலகச் சூழலில் இருந்து பிரித்து நித்தியானந்தத்தை நிறைவுற அருளி ஆசீர்வதித்துக் கொண்டார்.

### பெரிய உபாத்தியாயர்

பெரிய உபாத்தியாயர் என்னும் பெரும் பெயர் தனித்துவம் வாய்ந்த தாய் அவருக்கே தனி உரித்தாகி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிப் பாலர் பகுதி மாணவர் தொடங்கி அதிபர் ஈறாக, கோப்பாய்க் கிராமம் எங்கும் ஒலித்து அதன் எல்லையையும் மீறித், தமிழ் ஆசிரியர் சங்கங்களில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணம் முழுவதிலும் பெற்றோர் வாயிலிருந்து இன்புடன் உச்சரிக்கும் அளவுக்கு பெரிய உபாத்தியாயர் என்ற பெயருக்கே பெருமை தேடிக் கொடுத்தார். ஆசிரிய உலகத்தில் — தமிழ் ஆசிரியர் மத்தியில் — இராசரத்தினக்காவை ஒருவேளை தெரியாமலிருக்கலாம். திருமதி சொலமன்ஸ் என்று தெரியாமலிருக்கலாம்; நிமிர்ந்த உஷாரான நடை, அழகிய கவர்ச்சிகரமான ஆடையணி. தன்னம்பிக்கையோடு கூடிய புன் முறுவல் பூத்த முகம், மூக்குக்கண்ணாடி, நாகரீகமான கைப்பை (Handbag) கைக்குடிகாரம் இத்தனையோடும் விஷயத்தைத்தனக்கே உரிய பாணியில் அடித்து உறுதிக் கூறும் வன்மையோடு கூடிய பெரிய உபாத்தியாயரைத் தெரியாதவர்கள்இருக்க முடியாது.

### நல்லாசிரியர்

கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் என்ற பாரம்பரியத்தில் பெரும் புகழோடு வளர்ந்துவரும் கோப்பாய்

கிறிஸ்தவ கல்லூரியின் பெருமைக்கு பெரிய உபாத்தியாயரின பங்கு மிக முக்கியமானது. செல்வி ஹச்சின்ஸ் அம்மையார் போன்ற மிஷனரிமார் ரோடுகொண்ட நெடுங்காலப் பழக்கத்திலுல் ஆசிரியப்பணியைத் தேவ ஊழியமாகவே கருதிச் செய்து அதில் இன்பங் கண்டார் எம் பெரிய உபாத்தியாயர்.

''குலன் அருள் தெய்வங்கொள்கை மேன்மை
கலிபயில் தெளிவு கட்டுரை வன்மை'

என்று பவணந்தி நல்லாசிரியனுக்குக் கூறிய நல்லிலட்சணங்கள் அத்தனையும் ஒருங்கே பெற்ற சொலமன்ஸ் அம்மையார் அகமும் முகமும் மலர அழகிய ஆடை அணி அணிந்து அழகொழுகப்பேசிப் பிரதம வகுப்பு மாணவ மாணவிகளின் இதயத்தில் இடம் பெற்றமையில் ஆச்சரியமில்லை தான் கல்வி கற்பிக்கும் மாணவர்களைத் தம் சொந்தப்பிள்ளையாக நினைந்து, தனித் தனி ஒவ்வொரு மாணவனிலுங் கவனஞ் செலுத்திக் குறை நிறைகளை ஆய்ந்து, குறைகளுக்கு காரணங்காணப் பெற்றோரின் உதவியை நாடி அறிந்தும், பெற்றோருக்கு அறிவுரை அளித்தும், மாணவருக்குத் தகுந்த தண்டனையும், புத்திமதியும், சலுகைகளும் வழங்கியும் பரிகாரம் தேடியமை எல்லா ஆசிரியர்களும் பின்பற்றத் தக்க முன்மாதிரிகளாகும்.

**கடமையிற் கருத்து**

சக ஆசிரியர்களுடனும், பிரதமபகுதியில் தனக்குக்கீழ்க் கடமையாற்றிய ஆசிரியர்களுடனும் சிநேகபாவத்துடனும், சகோதரத்துவத்துடனும் தமாஷாகப் பேசி இன்புறும் அதே பெரிய உபாத்தியாயர் பிரதம வகுப்புக் கடமைகளைக் கண்காணிப்பதில் மிகக் கடுமையான பேர்வழி.

வகுப்பு நேரங்களிலும், கடமை நேரங்களிலும் கடமையிற் சற்றுத் தவறுவோரிடத்தும் மிகக் கண்டிப்பான வேறொருவராக காட்சியளிப்பார். ''கடமை என்றூல் கடமை; இம்மியளவும் பிசகக்கூடாது. நாங்கள் எடுக்கிற காசுக்கு ஆண்டவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்'' இது அவர் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகள். சற்றுயர்ந்த தொனியில் கூடான வார்த்தைகளும் இடம்பெறும்போது ஆசிரியர்களுக்குக் கவலையும் வெறுப்பும் ஏற்படுவதுமுண்டு. ஆனல் வகுப்பு வேலைகள் கிடு, கிடுப்பாக நடைபெறும்; அடுத்தநாள் தேநீர் இடைவேளையின்போது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பாற்கோப்பியோ சிற்றுண்டியோ பரிமாறிக் கல கலப்பாகப் பேசுவதை நிச்சயமாகக் காணலாம். அப்படிப்பட்ட பெரிய உபாத்தியாயரின் கீழ் நாலு வருடங்களுக்கு மேல், பிரதம வகுப்புகளிற் சில பாடங்கள் கற்பிக்கும்பேறு அடியேனுக்கும் கிடைத்தது; மேல் வகுப்புகளிலிருந்து வருவதற்குச் சிறிது

தாமதித்தால் போதும்; அப்பியாசப் புஸ்தகங்கள் திருத்தத் தாமதித்தால் போதும்; தொடங்கிவிடுவார். அதே வார்த்தைகள் — கடமையென்றுற் கடமை; இம்மியளவும் ——; அதே கண்டிப்பு வார்த்தைகள். பலன் ருசியாகத்தான் இருக்கும்; பாற்கோப்பி சிற்றுண்டி மாத்திரம் அல்ல. அறுசுவையோடு கூடிய அமுதையும் பல முறை சுவைத்தின்புற்றேனென்றுல், எத்தனைமுறை எவ்வளவு கடுமையாகத் தண்டிக்கப்பட்டுத் திருந்தியுள்ளேன் என யூகித்துக்கொள்ளுங்கள்.

**கடைசி நாட்கள்**

அம்மையார் தம்மை நீண்டநாள் வருத்திய நோயை ஜெபத்தாலும், ஆண்டவன்மேல் வைத்த விசுவாசத்தால் ஏற்பட்ட மனப்பெலத்தாலும் மேற்கொண்டு எவ்வித மருந்துகளும் இன்றியே (நான் அவரோடு நெருங்கிப் பழகிய காலந்தொட்டு) சுகபெலத்துடனும் சுறுசுறுப்புடனும் மன நிம்மதியுடனும் தன் கடமையிலேயே கருத்தாக இருந்தார். சென்ற ஆண்டு, முதலாந் தவணைப் பரீட்சை அண்மிய காலத்தில், தனக்குக் காலில் ஏற்பட்ட புண்ணையோ அதைச்சார்ந்து வந்த காய்ச்சலையோ பொருட்படுத்தாமல் பாடசாலைக் கடமைகளையே பெரிதாக மதித்துக் குறைவுறச் செய்துவந்தார். ஆனல் அதிபரும், ஆசிரியர்கள் அனைவரும் அவருடைய சுகக்குறைவை அவதானித்து அவரைச் சிலநாட்கள் ஓய்வு எடுத்து உடனலத்தைப் பேணும்படி வற்புறுத்தி அதற்கான மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்த முயன்றுர்கள். அருமை மகனும், அதிபர், ஆசிரியர்களும், உற்றுர் உறவினர்களும், எவ்வளவோ வேண்டியும், வைத்திய உதவியைப் பெற அறவே மறுத்துவிட்டார். ''கர்த்தருக்குச் சித்தமானல் அவர் இவ்வுலகில் என்னை வாழவைப்பார் அல்லது அவர் என்னை எடுத்துக் கொள்வார்'' இதே வார்த்தைகள் தான் அவர் வாயினின்றும் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தன. மனத்திலே எவ்வித சலனமுமின்றித் தைரியத்துடன் அவர்கள் கூறிய வார்த்தைகள் எங்கள் எல்லோரையும் பிரமிக்கச் செய்தன. தெய்வீகச் சூழலில் ஜெபதப வாழ்க்கையில் அவர் நாட்டங்கொள்ளவே அவருடைய வேண்டுகோளின்படி சுண்டிக்குளியிலுள்ள ஆச்சிரமத்தில் (Faith Home) சேர்த்தோம். தெய்வ சிந்தனையன்றி வேறென்றை அறியாதநிலையில் மனத் திடத்தோடும் விசுவாசத்தோடும் அவர் வாயிலிருந்துவந்த ஜெபம் (பரகதியடைய முதல்நாள்) எங்கள் எல்லோருக்கும் — கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்ற பேதமின்றி — உலக நிலையாமையின் உண்மையை உறுத்துவனவாகவும், பிறவியின் நோக்கம் இறைவனடி சேர்வதாகிய பேரின்பம் அல்லது முத்தியடைதலே என்பதை எமக்கு விளக்குவனவாகவும் அமைந்தன. அடுத்தநாள் அவர்தம் அன்புமகனும் அதிபர் ஆசிரியர்களும், உற்றுர் உறவினரும், ஊராரும், மாணவரும்,

அவர் பிரிவைத் தாங்காது பரிதவிக்க எம்மைவிட்டு அவர் அவாவிய இறைவன் பாதாரவிந்தங்களை அடைந்தார்.

இறுதி அஞ்சலி

அம்மையாரின் வீட்டில் நடந்த இறுதி ஆராதனையின்பின் அவரின் பூதவுடல் தகுந்த மரியாதைகளுடன் அதிபர் ஆசிரியர்கள் தாங்கிவர, மாணவர்கள் பவனிவரக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டு, அதிபர் அவர்களின் தலைமையில் அவரின் ஆத்மசாந்திக் கான பிரார்த்தனை நடைபெற்றது. ஆசிரியர்கள், பழைய ஆசிரியர்கள் மாணவர்கள், பழைய மாணவர்கள், ஊர்ப்பெருமக்கள் எல்லோரும் தனித்தனி சென்று அம்மையாரின் பூதவுடலுக்குத் தமது இறுதி அஞ்சலியைத் செலுத்தியபோது, தம் நன்றிக் கடலைக் கண்ணீருருத்த காட்சி உள்ளத்தை உருக்குவதாயிருந்தது. பெரிய உபாத்தியாயரின் பூதவுடல் தான் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டது. ஆனல் அவருடைய ஆத்மா இன்றும் எம்மோடு இருக்கின்றது.

அவர் காக்காவை முன்மாதிரியாகவைத்து மாணவர் வாழவேண்டுமென அடிக்கடிகூறும் காக்காயின் கதையை மாணவர் சொல்லிக் கொண்டிருப்பது இப்போதும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

அவர் பிரிவாற் தவிக்கும் அவருடைய ஒரே செல்வமகன் 'சாம்' உக்கும், குடும்பத்துக்கும் இறைவன் சாந்தியளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

'கடமையென்றுற் கடமை,
இம்மியளவும் பிசகக்கூடாது''

வேதவல்லி கந்தையா

○ ○ ○

எது சமயக்கல்வி?

உலகநேயம் யாண்டும் பேசப்படுகிறது. அந்நேயம் பரவாமைக்குக் காரணம் நாடு — மொழி — நிறம் — வகுப்பு முதலிய புறவேற்றுமைகளில் மக்கள் கருத்தைப் பதித்திருப்பதேயாகும். மக்கள் அக்கருத்தைச் சிறிது அகமுகமாகத் திருப்பி, ஆன்ம ஆராய்ச்சியிற் செலுத்தின் அங்கே எவ்வேற்றுமையும் காணப்படா. அவ் வான்ம ஆராய்ச்சியே சமயக்கல்வி என்பது; மற்றக் கல்வித்துறைகள் யாவும் சமயக்கல்விக்கு உடல்போன்றன;

— மணிமொழி.

**The Late Mrs. F. C. Daniel**

# The Late

## MRS. F. C. DANIEL

The late Mrs. F. C. Daniel, known to one and all as "Ratna Acca was a very dearly loved colleague and friend of mine. I felt a deep sense of desolation on the day I heard the sad news, that our Ratna Acca, a veritable jewel among women was no more. I first came into contact with her when I joined the staff of the C. M. S. Girls' School, Kopay in 1939. Fresh from College, I was in a state of extreme nervousness as I was directed to the class-rooms, when out of one of them came Ratna Acca with her sunny smile and hearty voice of welcome, which dispelled all my fears. Yes, Ratna infused every-one she met with her own energetic enthusiasm and zeal.

In the classroom she was a firm, yet kind teacher, so understanding that she was able to draw out the best in each child. She took an active part in games, and I can well remember how she would be one with the girls in a game of netball. Even in those early days, she was greately interested in play-acting, and when Miss Hutchins had one of her earliest plays at Kopay, she did not act-she lived the part of the heroine. She served her Lord and Master with a deep and lasting faith, and was always devoted to the Church. I don't

think there was ever a service in Kopay, when her strong, beautiful voice could not be heard leading the choir. A devoted wife, a loving mother, a perfect teacher and a born singer, sum up nearly all her service in this world.

How true it is that such a life cannot but leave behind her footprints on the sands of time. We surely cannot but raise our hearts in praise to God for such a soul, who would most certainly have been welcomed by her lord with the highest praise on earth, "Well done, thou good and faithful servant".

May her soul rest in that devine Peace which passeth all human understanding.

---

"The Ball no Question makes of Ayes and Noes,
But Right or Left as strikes the Player goes;
And He that toss'd Thee down into the Field,
He Knows about it all—He knows—HE knows."

— *Omar Khayyam*





**Mr. A. G. Rajaratnam** B. A. (Hons) Lond.
*Asst. Teacher*
*17–10–68 — 17–5–70*

# CROSSED OVER

Mr. A. G. Rajaratnam was with us for one year and seven months to the date. Eighteen days before his retiring day the life–line snapped–all too suddenly. It was an unexpectedly wet day. Most of us were without umbrellas. Going from class to class in a never-ending drizzle made most of us wet through and through. A. G. R. was one such victim of this rain. At the end of this day the ordeal of a bus wait had to be faced. More rain and more wetting. The only thing that cheered us through this most unpleasant weather was A. G. R's spicy humour. He kept us going till we became safely ensconsed in the cushioned seats of a double-decker, Jaffna bound. Having taught with us, he also travelled with us. Alighting at the First Cross street level crossing halt he walked home briskly probably to get into dry clothing and warm himself with a cup of refreshing tea in his home. A couple of hours later news reached us that our A.G.R. had "Crossed over".

He began his teaching career at Jaffna Central Collage in 1938, as a history–honours graduate of the London University. Seven years later he did his post-graduate training at the Govt. Training College, Colombo. Then he entered Government service and taught in several schools in the Northern, Eastern and Central Provinces. He came to spend his last days with us.

His classes were never rigid and formal. He disliked to being rude to little children. He never was rude. All his classes were marked by a lively atmosphere. Outside the class-room Mr. Rajaratnam was all cordiality to his pupils. He loved the company of the young. He was always found in their midst. It calls for greatness for a man of sixty years to

find himself quite at home in the company of youthful minds and share their humour with out losing his own mature identity. That was A. G. R.

As colleagues we always found him in perpetual geniality. Gloom iness was never a part of his personality. He was forthright in his speech but ever courteous and mindful of others feelings. There was an air of freedom about him which perhaps made him the happy man that he was: He strove to share this freedom with all others who came into contact with him. Tied down with pre judices and inhibitions of a m odern civilisation we always found it difficult to step into his circle of abandonment and independence.

Mr. Rajaratnam was a reading man: The reading habit is a rare commodity in this fast moving age. Most of us teachers don't read beyond the daily newspaper!! A. G. R 's usual abode, apart from his home, was the Public Library. Here was a man who knew the value of time, yearned for the company of the great, and strove incessantly to enter the rich heritage of the past. In his latter days some of us were getting irresistibly infected with his desire for books; he would lend what he enjoyed, that others may profit. The time was woefully brief for us to benefit by his greatness. Greatness was thrust into our midst and we knew it not. In absence is he most felt and missed!

By a Colleague.

# MRS. M. M. ARIYANAYAGAM

It is not at all easy to give a true picture of a truly great woman. The greatest tribute that can be paid to Mrs. M. M. Ariyanayagam is that she is a born teacher. By the suavity of her manners and mannerisms, by the efficacy of her teaching methods, by her exemplary character, she was indeed a rare asset to the teaching profession. It was part of her unassumed greatness that in all her ways she was simple, utterly simple. She could see that her charges did not wander off the track, and could encourage them when the road seemed harder than they anticipated when they embarked on it. Above all she could sustain their faith that the chosen path, even when it seemed hardest was still the path they first chose, and the only path which deep down in them, they knew was worth travelling.

Kopay Christian College is fortunate that Mrs. Ariyanayagam graced her portals for seventeen long years. As a teacher of English, History and Christianity she was unparalleled she had her full quota of extra-mural activities that it is dfficult to imagine the school without her. Perfection in every thing she did was her motto, and her singular role as real pace-setter not only in the school, but in the neighbourhood as well, need not be over-emphasised. She displayed a singleness of purpose, devotion to duty and loyalty to the cause of education, which won the respeet of her pupils, colleagues on the Staff and the Principals of the school. Whether in the production of a play or the organisation of a function or helping neighbouring children, she showed such persistence and perfection that she was an inspiration to every body who came in contact with her.

Mrs. Ariyanaygam was never too busy to be courteous Few things displeased her more than ill-manner or rudeness on the part of those who should have known better. When somebody failed in good manners she was grieved to the heart. Mrs. Ariyanayagam was widely read and her speech revealed her true

mettle. She was gracious without effusion.

It is tragic that Mrs. Ariyanayagam's retirement synchronizes with the ending of an era and the beginning of another; and she leaves us at a time when we need her most. However she goes into her well-earned retirement with the satisfaction of a mission well accomplished. She leaves behind the imprint of her personality which neither time nor tide can erase. There is no doubt that her record of service will serve as a beacon to many, for years to come. Kopay Christian College will long cherish the memory of Mrs. Mercy Mathuram Arianaygam, the noble teacher and unobtrusive worker. With reverence we salute her, with affection we bid her farewell. May God bless her and her family and grant her many, many years of happy and useful retired life.

The Moving Finger writes; and, having writ,
Moves on: nor all your Piety nor Wit
Shall lure it back to cancel half a Line,
Nor all your Tears wash out a Word of it.

*"Omar Khayyam"*

# ஆசிரியர்

# திரு. சி. சிற்றம்பலம் அவர்கள்

யாழ்ப்பாணக் குடா நாட்டின் திலகம் போல் விளங்குவது கோப்பாய் என்னுமூர். இது பண்டு தொட்டு இன்று வரை நூலாசிரியர்களையும் போதனாசிரியர்களையும் ஈன்றெடுக்கத் தவறவில்லை. ''திராவிடப் பிரகாசிகை''யென்ற நூலை யெழுதி தமிழிலக்கிய வரலாற்று நூல்கட்கு முதன்முதலில் வழிகாட்டிய சபாபதி நாவலரவர்கள் இவ்வூரவரே யாவர். ஆறுமுகநாவலர்க்கும் பிறர்க்கும் போதனாசிரியனாக இருந்து தமிழ் வளர்த்த சேனாதிராய முதலியார் இவ்வூரின் ஒரு பகுதியாகிய இருபாலையைச் சேர்ந்தவரே. மேலும், ''சைவசித்தாந்த சாரசங்கிரகம்'' என்னும் சைவசித்தாந்த நூலை இயற்றிச் சைவம் வளர்த்த புலவர் வேலுப்பிள்ளையவர்களும் இவ்வூரவரே யாவர். இவர்கட்குப்பின் கோப்பாயூரைச் சேர்ந்த பல அறிஞர்கள் இவர்களடியைப் பின்பற்றிச் சென்றனர். அவர்கள் வரிசையிலே இடைவெளி யேற்படாதபடி இளஞ்சைவப் புலவர் சி. சிற்றம்பலமவர்கள் கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்டார்.

ஆசிரியர் சிற்றம்பலமவர்கள் பரம்பரையான சைவக் குடும்பத்திலே பிறந்து சைவசீலராக வாழ்கின்றவர். அதனாலே சிவனடியார்கட்குரிய குணநலன்கள் யாவும் வாய்க்கப் பெற்றவர். இன்றைய நவீன உலகம், உணவு, உடை, பழக்க வழக்கம் முதலிய துறைகளிலே பெரிய மாற்றங்களையடைந்து வருகிறது. அதுவும் அரசியலாழியர்களாகக் கடமையாற்றுபவர்களே இத்துறைகள் மேலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஆசிரியர் சிற்றம்பலமவர்கள் பல இடங்கட்குச் சென்று ஆசிரியத் தொழிலை நடத்தினாலும் சைவ ஒழுக்கத்தினின்றும்சிறிதும்வழுவினாரன்று. சைவ சீலராக ஒழுகுபவர்கள் பல கட்டுப் பாடுகளைக் கடைப் பிடிக்க வேண்டும். இதற்குப் பொறுமை என்ற வன்மை வேண்டும். இத்தகைய ஒப்பற்ற பொறுமை—வன்மை இவரிடங் காணப்பட்டதால் யாவர்க்கும் இனியராக அவர் காட்சியளிப்பார். ஆசிரியரோ அன்றேல் மாணவரோ அவர் கோபத்தைச் சிறிதேனும் பெற்றது கிடையாது.

ஆசிரியர் சிற்றம்பலமவர்கள் கோப்பாய்க் கிறிஸ்தவ கல்லூரிக்கு வந்தபின் உயர் வகுப்புகட்கு இந்து சமயபாடங் கற்பிக்குஞ் சந்தர்ப்பத் தைப் பெற்றார். அது அவரை இளஞ் சைவப் புலவர் பரீட்சை எடுக்கத் தூண்டியது. அதில் அவர் வெற்றி கண்டார்; ஆசிரியர் சிற்றம்பலமவர் கள் இந்துசமய நூலறிவு மாத்திர மன்றி தமிழிலக்கண இலக்கியங்களை யும் கற்றுத் தேர்ந்தவர். இவரைக் கடினமான இலக்கணக் கேள்விகளை கேட்டு விட்டால் உடனே பதில் சொ ல்ல முடியா விட்டால் இலக்கண நூல்களைப் பார்த்து விடைகண்டே தீருவார். உயர் வகுப்புகட்குரிய தமி ழிலக்கண இலக்கிய கேள்வித்தாள் களை தவணைக்குத் தவணை எடுத்துப் பார்ப்பார். அவற்றில் சிறந்த வினாக் கள் காணப்பட்டால் அவற்றை எடுத்த ஆசிரியரைப் போற்றுவார். இதிலிருந்தே அவருக்குத் தமிழிலக் கண இலக்கியங்களிலுள்ள ஆர்வத் தையும் புலமையையும் உணரலாம். நமது கோப்பாய்க் கிறிஸ்தவ கல் லூரியில் நாள்தோறும் கல்லூரி ஆரம்பநேரத்தில் நடைபெறும் இந்து சமயப் பிரார்த்தனை நேரத்தில் இவ ரது சமயச் சொற்பொழிவு தங்கு தடையின்றிச் செல்லும். கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பச் செய்வது இவரது சமயக் கருத்துக்கள்.

நம்மாசிரியர் அவர்கள் நூற்ப டிப்பு மாத்திரமன்றி உலகியலறிவும் வாய்க்கப் பெற்றவர். இதனை இவரது சமயச் சொற்பொழிவுகளிலி ருந்தும் மாணவர்க்குக் கற்பிக்கின்ற வற்றிலிருந்தும் அறியலாம். சுருக்க மாக இவரது குணத்தைக் கூறுவதா யின் பவணந்தி முனிவர் கூறிய,

'குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கல்வியில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மனநிகர் மாட்சியும்
உலகியல் அறிவொடு உயர்குணம் இனைய
வும்
அமைபவர் நூலுரை ஆசிரி யன்னே'

என்ற பாடல் மிகவும் பொருந்தும். அரசினரின் உத்தரவுப்படி தமது ஐம்பத்தேழாவது வயதில் கோப் பாய்க் கிறிஸ்தவ கல்லூரியில் கற்பிக் குங் காலையில் ஓய்வுபெற்ற இவர் நூறுவயது சென்றாலும் வாலிபனைப் போல் போதிக்கும் உற்சாகமுடைய வர். இவர் ஓய்வுபெற்றபொழுதி லும் இவரின் உதவிகள் பல்வேறு துறைகளிலும் கல்லூரிக்குப் பயன் படுமென்பதில் ஐயமின்று.

மாணவர்கள்.

# என் ஆசிரியர்

# திரு. சு. குமாரசுவாமி அவர்கள்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை தன்றென்ற தெய்வப் புலவர் வாக்கிற்கிசையத்தோன்றி புகழொடு வாழ்ந்தவர் என் ஆசிரியர் திரு. சு. குமாரசுவாமி அவர்கள். இப்பெரியார் பிறந்ததால் பெருமை பெற்றது 1911 ஆம் ஆண்டு ஒக்ரோபர் திங்கள் 12–ஆம் நாள். வழமையில் ஒக்ரோபர் மாதத்தில் பிறந்தவர்கள் பிரபலமாக வாழும் இயல்புண்டு. உலகஉத்தமர்மகாத்மாகாந்தி,ரூஷிய பிரதமராயிருந்த குருஷோ, எமது இன்றைய பிரதமர் திருமதி பண்டார நாயக்க என்போர் பிறந்தது இம்மாதத்திலேயே. அந்தவரிசையில் பின்னின்றவர் அல்லர் எம் ஆசிரியர்.

பெருமைகளின் பிறப்பிடமான திருநெல்வேலியில் சைவாசார சீலராய் வாழ்ந்த சுவாமிநாதர் என்ற பெரியார் செய்த தவப்பயனில் அன்னவர் சிரேஷ்ட மகனாகப்பிறந்தார். ''தம்பி உள்ளவன் சண்டைக்கஞ்சான்'' என்ற பழமொழி இவர் விடயத்தில் பலித்திலது. மற்றவருடன் சோலிக்குப் போகார் இவருக்கு வாய்த்த தம்பியரும் கல்வி கேள்வி பண்பிற் சிறந்தவர். எனவே சண்டை வரும் வாய்ப்பே வந்ததில்லை. இளமையிற் கல்வி பயிலச் சென்ற இவர் திருநெல்வேலியில் அமைந்த சைவப் பாடசாலையிலும் நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் கற்றனர். ஆங்கிலங்கற்கும் அவாவினால் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கற்று இலண்டன் மற்றிக்குலேசன் சித்தியெய்தினர். இளமையிலேயே ஆசான் பணியை விழைந்த இவர் தமிழில் ஆசிரியத் தராதரப் பத்திரமும் இலக்கணத்தோடு இலக்கியங் கற்று பாலபண்டிதமும் சித்தியெய்தினர்.

இதுகாலை கல்வியங்காடு சைவவித்தியாசாலையில் ஆங்கிலங் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமை ஏற்ற இவர் அப்போதேதான் ஒரு தராதரமுள்ள ஆசிரியராக வேண்டுமென்று கருதி லண்டன் சர்வகலாசாலைப் பட்

டதாரியாக முயன்றார். இம் முயற்சி யின் வெற்றியாக லண்டன் இடை நிலைத்தேர்வில் (Inter arts) தேர்ச்சி பெற்றார். முயற்சி பலிக்காததால் லண்டன் பட்டதாரியாகாத இவர் 'மஹாநகம' வ்லுள்ள 2—ம் தரப் பயிற்சியிற் புகுந்து பயிற்றப்பட்ட ஆசிரியராகவெளிப்போந்தார். இதன் பின் வெளியிடங்களுக்குப்போகவேண் டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது முள்ளியவளை சிவானந்தாக் கல்லூரி யிலும் பின்னர் மன்னார் மாவட்டத் தில் அடம்பன் மகாவித்தியாலயத்தி லும் கற்பித்தார். ஆங்கு சிலகாலம் பதில் அதிபராகவும் இருந்தார். பதவி உயர்வைக் கொடுத்துப் பண் பைக் காட்டிக் கொள்ள அரசு விரும் பவில்லை. இதனால் கடைசி ஊருடன் போவோமென்று கருதி வேலணை மத்திய மகாவித்தியாலயம் வந்து ஓழுக்கமும் சமயமும் ஒருசேரப் பயில வைத்தார். பின் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் கற்பித்தார். சற்றில் இலத்தரசியின இருப்பிடத் திற்கேகவிழைந்து கோப்பாய் கிறிஸ் தவகல்லூரியிற்சேர்ந்தார். 60 ஆண் டுப் பராயம்வரை கற்பிக்க விரும் பிய இவரை அரசு 55 வயதுக் கட்டுப் பாட்டின் மூலம் 59—ஆம் வயதில் இளைப்பாறச் செய்தது.

இவர் முதன் முதல் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய போ தும் அப்பவே மேல் வகுப்புக் கணித மும் கற்பித்தார். பயிற்றப்பட்ட ஆசிரியரானதும் எப்பாடங்களையும் (விஞ்ஞானம் தவிர) கற்பிக்கும் சக்தி யைப் பெற்றிருந்தார். சிறு கதை கள் கூறி மாணவரைச் சிரிக்கவைத் தும் சிந்திக்க வைத்தும் கடமையாற் றினார். தெளிவான முறையில் விளக் கந்தந்து தெளிவுறச் செய்யும் சக்தி வாய்ந்தவர். இவரின் உடன் பிறந் தோர் பதின்மர். அவரில் எழுவர் பெண்கள்; மூவர் ஆண்கள். இவரின் தம்பியரில் ஒருவர் இந்திய சர்வகலா சாலைப் பட்டதாரியாகி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாள ராகவும் இன்னொருவர் கணக்காளர் (Accountant) ஆகவும் பணிபுரிகின் றனர்.

இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப் பாணத்திலும் பிரபலமாக இருந்த சித்திர வித்தியாதரிசியான S.R.K. எனப்போற்றியகனகசபையின்உடன் பிறந்த அண்ணன் சின்னத்துரையவர் களின் ஏக புத்திரி துரையம்மாவை வதுவை செய்து இல்லறமென்னும் நல்லறஞ்செய்து அவன் நன்கலமாக நன்மக்களைப் பெற்றுள்ளார்.

நிலன்புலகளுடன் ஐசுவரியமாக வாழும் இவருக்கு மக்களுக்கு வேலையில்லாதது போன்ற துக்கங்கள் இல்லாமலில்லை. இருந்தும் 60 வயது நடைபெறும் அவர் இளைஞன்போன்று இன்னமும் துவிச் சக்கரவண்டியில் ஊர்ந்து செல்லுகின்றார். இத்தகைய நல்லாசான் சேவையை கிறிஸ்தவ கல்லூரி முழுமையிற் பெற பாக்கியம் பெற்றில தென்றே கூறவேண்டும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டின் கீழ் கடமையாற்றிய இவ்வாசிரியர் இளைப்பாறுங்காலம் சேவைகள் பூரிந்து சிறருடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஒரு மாணவன்.

● ● ●

## புகையே பகை !

புது நாகரிகத்தால் வேறொரு கொடுமை சிறப்பாக இளைஞரிடைக் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. அஃதென்ன ? சுருட்டு, சிகரெட், பீடி முதலியன பிடித்தல். சிறுசிறு குழந்தைகள் வாய்களும் புகையந்திரங்களாக மாறிவிடுகின்றன, அவர்தமது நுரையீரலும் இதயமும் அப்புகை வெம்மையால் எரிக்கப்படுவதைத் தொடக்கத்தில் உணர்கிறார்களில்லை. நாளடைவில் இளைஞர்கள் அழகிழந்த என்புக் கூடுகள் ஆகின்றனர். உடலுக்குக் கேடு விளைக்கத்தக்க வழக்க ஒழுக்கங்களில் இளைஞர்க்குப் பற்றும் பிடிவாதமும் உண்டாதல் தவறு. அத்தீப் பயிற்சியுடைய இளைஞர் மெல்ல மெல்ல அதை ஒழிப்பாராக.

— மணிமொழி.

# புதுமையும்
# பெண்ணுரிமையும்

புதுமையென்னும் பகந்தளிர்கள் பாரகமெங்கும் தளிர்பரப்பித் துளிர்க்கின்ற வேளையிலே புதுமையென்னும் புயற்காற்றுல் பழமை யென்னும் பாழும் சருகுகள் அடித்துச் செல்லப் பட்டு ஓதுக்கப்படும் ஓர் உயரிய காலக் கட்டத்திலே இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறேம். இன்னும் அழகாகச் சொல்வதானுல் மனித நாகரீக வளர்ச்சியின் இளவேனிற்காலத் தொடக்கத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறேம் எனலாம். ஆனுல் காலமென்னும் பேய்க் காற்றின் பலமான வீச்சிலும் எடுபட்டு வீழாது புதுமைச் செடியிலே பழமைச்சருகுகள் பல ஒட்டியபடியே இன்னமும் இருக்கின்றன. பழமைக்கும் புதுமைக்கும் ஆண்டாண்டு காலமாக நிகழ்ந்து வரும் நீண்டகாலப் போர் இன்று அதன் இறுதிக்கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. அறியாமையும் ஒழுக்கக்கேடுகளும், ஆண்டாண்டு காலமாக நிலவி வந்த பழுத்தறிவுக் கொவ்வாத பாரும் பழக்க வழக்கங்களும் பழமைக்குப் பக்கபலமாக நின்று போரிடுகின்றன. விஞ்ஞான அறிவியலும், மெய்யுரையும் அஞ்ஞானத்தை அகற்றவந்த அறவோரின் வாழ்க்கை நெறியும்புதுமைக்குத் துணையாகப் பொருந்துகின்றன. இருந்தும் புதுமையின் பூரணத்துவத்தை எம்மாற் காணமுடியவில்லை. காரணம் எமது போர் முறையில் ஓர் பெருந்தவறு இருந்து வருகின்றது. மண்பதையின் மலர்ச்சிக்கு நிலைக்களனுகும் பெண்குலத்தைப் புதுமைபெற வைப்பதில் நாம் பின்னடைந்து விட்டோம். இத்தவறைத் தமிழினத்தார்க்கு முதல் எடுத்துக் காட்டியவர் பாரதியார்.

"புதுமைப் பெண்" "பெண் விடுதலை" என்ற தலைப்புகளையுடைய பாடற் கருத்துக்கள் ஒவ்வொன்றும் பெண்களது வாழ்க்கை இலட்சியமாக என்று உருக்கொள்கின்றதோ அன்றே புதுமையும் உருவாகும் பொன்னுள் எனலாம்.

பிறந்த நாட்டைத் தாய் நாடு என்றும், பேசும் மொழியைத் தாய் மொழி யென்றும், வணங்குந் தெய்வத்தை அன்னையென்றும் பண்டு தொட்டு இன்று வரை பெண்ணினத்தைப் போற்றிவரும் இனம் எம்மினம். பெண்ணினம் புதுமைபெற இது போதாதா? என்று வினவுவோர் எம்மிடையே அநேகர் உளர். ஆனால் தனிமனிதன் வாழ்வில் ஒரு பெண் எத்தகைய குறுகிய வட்டத்திற்குள் ஒடுக்கப்படுகிறாள் என்பதை அறியும் போதுதான் உலகம் பரந்த உண்மையை எம்மால் காண முடிகிறது. மனிதன் மனிதனை அடிமைப் படுத்த, அறிவு, அம்பு, ஈட்டி, துப்பாக்கி, பணம் என்பவைகளை முறையே உபயோகித்து வந்திருக்கின்றான். ஆனால் பெண்களை அடிமைகொள்ள அவன் கொண்ட ஆயுதம் புகழ்மொழியே. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை பெண்களுக்கு அணிகலன் என்று இயற்கைக்கு மாறுகாத இலக்கணத்தை வைத்து அத்தகைய இயலாரையே பெண் என்று போற்றிப் புகழ்ந்து வருவதன் மூலம் இத்தனை காலமாக அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களை இருட்சிறையில் வைக்க முடிந்தது. இன்றும் இருட்சிறையில் அவர்கள்படும் இன்னலைக்கண்டு எவரும் பெண்ணுரிமைகோர முன்வரவில்லை. பெண்கள் பேதமையுடையவர்களாக, இல்லம் என்னும் ஒரு குறுகிய வட்டத்துள் வாழ்ந்து கொண்டிருப்பதனாற்றான் — அவர்களாற் பேணி வளர்க்கப்படும் குழந்தைகளும், தனது வீடு, தனது வாழ்வு எனும் தனிமை எண்ணங்களை உடையவர்களாக மாறுகின்றனர். இதனால் நாட்டில் தலைவிரித்தாடும் தன்னலவெறி பின் இழுபறிப் போட்டியாக மாறிக், கொலை, களவு, கையூட்டு (கைலஞ்சம்) என்பவற்றை என்றுமில்லாத அளவிற்கு இன்று கூட்டியுள்ளது. ''ஒரு அடிமையை வைத்திருப்பதுகூட ஒரு பெரும் சாம்ராச்சியத்தையே அழித்துவிடும்'' என்ற இவ்வுண்மையை உணர்ந்தே அறிஞர்கள் பெண்ணுரிமைகோர முன்வருகின்றனர்.

நமது நாட்டுப் பழமொழிகளான ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'', ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'', தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்'', ''தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சீலை'' என்று இன்னும் இதுபோன்ற பழமொழிகள் தாயின் அரவணைப்பில் வாழும்போது பெற்ற அன்பையும், அறிவையும் ஒழுக்கத்தையுமே வாழுங்காலம்வரை மனிதன் கைக்கொள்கிறான் என்பதை நினைவுறுத்துகின்றன. இன்றைய

உளவியல் அறிஞர்களும் தங்களது ஆய்வின் முடிவாக ஒரு தனிமனிதனின் வாழ்வு, தலைவிதி, தலையெழுத்து என்று இல்லாத கற்பனைகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை. பதிலாக நிழலில் இருக்கும் மரம் எப்படி ஒளியைநோக்கி நெளிந்து வளைந்து வளர்கிறதோ அதுபோல மனிதனும் சமுதாயச் சூழலுக்கேற்ப உருவாக்கப்படுகிறான். அதுவும் இளமையிற்பெறும் தாக்கங்களும், படிப்பினைகளுமே அவனது வாழ்க்கையின் வரலாறாக மாறுகின்றது என்கிறார்கள். இதன்மூலம் தாய்க்குலத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலுமே மனித இனத்தின் வாழ்வும் வளர்ச்சியும் எனலாம். பெண்ணினம் புத்தறிவுபெற்றும் புதுமையை வரவேற்கும்வரை, பழமையென்னும் இருட்சிறையினின்றும் வெளிவர விரும்பாதவரை, இன்று காணும் இன்னலும் இழிநிலையும் மனிதகுலத்தைவிட்டு அகலாதெனலாம்.

எடுத்துக்காட்டாகச் சென்றதமிழினத்தாள் சீர்பெற்று வாழ்ந்த சங்ககாலத்தை எடுத்துக்கொண்டால் அன்றைய தமிழகத்தின் புகழ்பூத்த பெருவாழ்விற்கும், அறங்காத்த அரசியலமைப்பிற்கும், ஒழுக்கத்தின் உயர்ச்சிக்கும் காரணம் யார்? ஆழமாக ஆராய்ந்தால் அது பெண்குலத்தால் வந்ததென நாம் பெருமையுடன் கூறலாம். அன்று, பெண்புலவர்கள் பெருகி இருந்த செய்தியினைப் புறநானூறு சொல்லும் வீரப் பெண்களின் வரலாறுகள் இன்றும் எமது இதயத்தில் வீரத்தை ஏற்றுகின்றன. அன்று ஒரு தாய் ஓர் மகனை ஈன்றாள். அந்த மகனிடம் அவள் எதிர்பார்ப்பது நாட்டுக்காக, நாட்டு மக்கட்காக தான் பிறந்த இனத்திற்காக ஏன் உலகிற்காக அந்த மகவு — தனது குழந்தை — எதைச் செய்யப் போகின்றது என்பதைத்தான். அதற்காகத் தன் மகவு இறப்பதைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை. பதிலாக அதையே தான் பெறும் பாக்கியமாகக் கருதினாள். இப்படித் தன்னலம் சிறிதுமில்லாத தூயவளாகப் பெண் வாழ்ந்தாள். தன் பிள்ளையையும் வாழ வைத்தாள். இதனால் சங்ககாலத் தமிழகம், அன்பில், அறிவில், ஒழுக்கத்தில் அதன் எல்லையையே காணவிழைந்தது. இதனால் இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னும் இத்தனை அறிவுவளர்ச்சியைப் பெற்றபின்னும் ஒரு பிடி சோற்றுக்கும் உலக இன்பங்கட்குமாகச் சொறிநாய்களைப்போல இழுபறிப்படும் இழிநிலையை அகற்றப் புறநானூற்றை நாம் புரட்டுகின்றோம்.

இன்றைய தாயை எடுத்துக் கொண்டால் அவள் தனது மகவிடம் எதிர்பார்ப்பது அதை — ஒரு மருத்துவ கலாநிதியாக, பொறியியல் நிபுணனாக, அல்லது கோழி மேய்க்கும் வேலையாளாக இருந்தாலும் ஓய்வு காலச் சம்பளத்தை உடைய வேலையாக ஒன்றைப்பெற்று, தான் இறக்கும்வரை அவன் இறக்காமல் வாழ்ந்தாற்போதும், அதுவும் பொருள்தேடுவதற்காக அவன் சையூட்டு வேண்டுவதையோ, வியாபாரியாக மக்களைச் சுரண்டுவதையோ மற்றும் அவன் செல்லும் வழி எத்தகைய சூறுக்கு வழியாக இருந்தாலும் தாய்க்குலம் அதைப்பற்றிக் கவலைகொள்வதில்லை. இத்தகைய இழிந்த சுயநல எண்ணந்தான் இன்றைய சந்ததியினரிடையே விரிந்து பரந்து சமுதாயப் பூசல்களாக உருவெடுத்திருக்கின்றது. சந்திரனில் வாழமுயலும்மனிதன் சொந்தப் பூமியிலேயே சோற்றுக்கு வழியற்றோர் இருப்பதை ஒத்துக்கொள்கிறான். இந்த நிலை, உண்டியும், ஆடையும், உறையுளும் குறைந்ததனால் வந்ததல்ல. பகிர்ந்துண்டு வாழும் பண்பை பகுத்தறிவை நாம் இழந்ததனால் வந்ததாகும். இதை உணர்ந்தே பாரதியும் ''பெண்கள் அறிவை வளர்த்தால், வையம் பேதமையற்றிடும் கண்டீர்'' என்றார். ''தேசத் தொண்டும் மடமையும் கொண்ட தாய் தலத்தில் மாண்புயர் மக்களைப் பெறுதல் சாலவே அரிதான செய்தியாம்'' என்று மேலும் வலியுறுத்துகின்றார் பாரதியார்.

முடிவாக ஆராய்ந்தால் நாம் தீயவைகள் என்று தள்ளிவைக்கும் அனைத்தும் தன்னல எண்ணங்களால் இருந்தே பிறக்கின்றன. நாம் நல்லவைகள் என்று போற்றி வளர்க்கும் எதுவும் பொதுநல உணர்விலேயே பிறக்கின்றன. இதையே உலக மதங்களும், சிந்தனையாளர்களும் வேறு மொழிகளில் கூறுகின்றனர். எனவே இத்தகைய உளப்பாங்கை இளமையிலிருந்தே எதிர்காலச்சந்ததியினருக்கு ஊட்டி வளர்க்கப் பெண்குலம் உரிமைபெறல் வேண்டும்.

இன்று புதுயுகத்தின் விடிவுக்காகக் கிழக்கு வெளுக்கும் கவினுறு காட்சியை நாம் காண்கிறோம். ''பெண்டிர் தமை விளக்கெனவே எண்ணி அதிலிலும் செய்திடலாம்'' என்ற நிலை மாறி வருகிறது. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியவர்கள் மாண்டு விட்டனர். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தையால் மனிதர்கள் மந்தைகளாக மதிப்பிடப் படுகின்றனர். அடுப்புக் கரையிலே குந்தியிருந்த பெண்ணினம் இன்று சட்டம், மருத்துவம், அரசியல், விஞ்

ஞானம் போன்ற பெருங்கலைகளைக் கற்றுப் பெரும் பதவிகளையும் பெற்று வருகின்றனர். ஆனால் இவற்றை வைத்துக் கொண்டும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெண்களும் பெற்று வருகின்றனர் என்று கூற லாமே தவிர பெண்களும் உரிமை யைப் பெற்று வருகின்றனர் என்று கூறமுடியாது. தன்னல உணர்வுடன் தமது உரிமைகளைப் பெறுவதும் புது மையென்ற பெயரால் குருட்டுத்தன மாக மேலைத்தேச ஆடைக் குறைப்பு களையும், அலங்கோலமான கலாச் சார வகைகளையும் கைக்கொள்வது உரிமை வாழ்வாகாது. உரிமை வாழ் வென்று, எனது வீடு, எனது நாடு. எனது தேசம் என்ற குறுகிய எல்லை களையும் கடந்து இனமத மொழி களையும் உடைத்தெறிந்து உலகுக் காக மனித இனத்திற்காக வாழும் வாழ்வே உயர் வாழ்வாகும். மூத்த பொய்களையும், மூடக்கொள்கைகளை யும் தகர்க்க முனையும் வாழ்வாகும். முடிவாக ''அமிழ்ந்து பேரிருளாமறி யாமையில் அவலமெய்திக் கவலை யின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளு தல் பெண் அறம்'' என்ற பாரதி யாரின் பா வரிகளை இலட்சியமாக ஏற்று அவ்வழியில் ஏறு நடைபோடு, என்று பெண்ணினத்தார் எப்போது முன்வருகின்றனரோ? அன்றே பெண்ணுரிமையின் விடியற் பொழு தின் அழகுக் காட்சியை உலகோர் காண முடியும்.

முற்றும்.

10 'C' மாணவி
சி. வசந்தலீலக.

● ● ●

## அழியாக் கருவூலம்

தொல்காப்பியர் பொருளின்பமும், திருவள்ளுவர் அறமும், இளங் கோவின் எழிலும், திருஞானசம்பந்தர் பண்ணும், சேக்கிழார் அன்பும், கம்பர் கவியுமல்லவோ நம் பெருஞ்செல்வம். இவையே நமது கருவூலம்— அழியாச் சேமநிதி.

— மணிமொழி.

# அனற்பிழம்பே என்முடிவு

பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிப் பழமாகிப் பூமியில் விழுந்த என்னை ஒரு சிறுவன் எடுத்து மாரியில் மண்ணிலே புதைத்தான். அவன் என்னுடன் வேறும் என்போன்ற அநேகரை என் பக்கங்களில் புதைத்தான். இருட்டிலே பேசிய நாம் ஒளியிலே கண்டு பேசுவதற்கு முற்பட்டு அதி விரைவில் ஒருவரை ஒருவர் முந்துவார் போன்று வளர்ந்து வந்தோம். எமது அழகையும் தோற்றத்தையும் கண்ட சிறுவன் எமக்கு அறுசுவை உண்டிகளை ஊட்டி வளர்த்து வந்தான். நாமும் கண்டோர் கண்ணைக் கவரும்படி அழகாக வளர்ந்து வந்தோம்.

ஒரு நாள் அந்த வீட்டிற்கு ஒரு பெரியவர் வந்தார். அவர் எங்கள் அழகைக் கண்டு எங்களில் ஒருவரைப் பணத்திற்கு விலையாகத் தரும்படி கேட்டார். அச்சிறுவன் பணத்தை வாங்கிக் கொண்டு என்னை எனது நண்பர்களிலிருந்தும் பிரித்து அந்தப் பெரியவர் கையிலே கொடுத்தான். பெரியவர் என்னைத் தனது மோட்டார் வண்டியிலே ஏற்றிக் கொண்டு சென்றார். மோட்டாரிற் செல்லும்போது எனக்கு நண்பர்களின் எண்ணம் வந்தது. அத்தோடு எனது தாயார் சொன்ன ''கடும் சிநேகிதம் கவலையைத் தரும்'' என்ற வாக்கு என நினைவிற்கு வந்தபோதிலும் விதியின் பயன் இது என எண்ணி நான் அவருடன்சென்றேன். அவர் என்னை எடுத்துத் தனது வீட்டுத் தோட்டத்திலே ''வளர்க'', ''வளர்க'' என்று வாழ்த்திய வண்ணம் நாட்டினார். சிலநாட்களுக்கு எனக்குக் குறைவின்றி உணவுகள் கிடைத்தன. நானும் வாழ்த்திய வண்ணம் வாழ்ந்தேன். ஆனால் நாட் செல்லச் செல்ல எனக்குப் போதிய அளவு உணவு கிடைப்பதில்லை. அப்போது நான் எனது பழைய எசமானை நினைத்துக கண்ணீர் விட நேர்ந்தது. இதன் பின்னர் என் முகவாட்டத்தைக் கண்ட அங்கு நின்ற வேலைக்காரன் என்னைப் பாதுகாக்கும் முகமாகச் சிறிது உணவுகள் கொடுத்தான். அவன் உதவியாலும் வானத்தின் உதவியாலும் நான் வளர்ந்து வந்தேன். இவ்வாறு வளர்ந்து தக்க பருவத்தை அடைந்தேன். அடைந்தபின் எனது இனத்தைப் பெருக்க எண்ணிப் பூர்க்கத் தொடங்கினேன். காற்றின் உதவியால் வேறு பூக்களிலிருந்து மக

ரத்த மணிகளை வருவித்துக் கனிகளை விருத்தி செய்து மக்களின் தாகத்தைத் தீர்க்கத் தண்ணீரையும்; எரிப்பதற்கு விறகையும்; வீடுவேய ஓலையையும் கொடுத்து மற்றவர்கள் விரும்பத்தக்க முறையில் நன்றி உடையவனாகவும்; தருமம் செய்பவனாகவும எனது வாழ்க்கையை நடாத்தி வந்தேன். ஆனாலும் எனக்கு ஓர் சிறு கவலை. '' உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் '' என்பது போல எனக்கு உயிர் கொடுத்த அவ்வேலைக்காரன் அங்கு நின்றும் அகன்று விட்டான். என் பயனை அவன் பெற்றிலன்.

இவ்வாறாக வாழ்க்கை நடாத்தி வந்த என் மீது ஒருவர் ஏறி என் இனம் பரப்பும் ஏனையோரைக் கைது செய்ய முற்பட்டார். இதையுணர்ந்த நான் இறைவனை மன்றாடினேன். மன்றாட்டத்தின் பயனாகவோ ! அல்லது அவரின் விதிப்பயனாகவோ ! அவர் மண்ணிலே வீழ்ந்து மாண்டார். இதனால் வேதனையுற்ற மக்கள் என்னை அங்குமிங்குமாகப் பிளந்து அணுவணுவாகத் தீயிலிடுமாறு என் எசமானிடம் கூறினர். இதைக்கேள்வியுற்ற எசமான் என்னை அங்குமிங்குமாகப் பிளக்க ஆயுதபாணி ஒருவனை நியோகித்தார். அவன் என்னை வெட்டிய போதும் யான் கண்ணீர் சிந்திக் கரு நிழலைக் கொடுக்கவும் கேளாமல் வெட்டி வீழ்த்தினான். விழுந்து வேதனையிற் கிடந்த என்னை அணு அணுவாகத் தீயிவிட்டான். நான் ''எனது புண்ணிய வயத்தால் வந்தது இது. இல்லையேல் என்னை மண்ணிலே புதைத்து மாய்த்திடுவார் '' என்று எண்ணியவாறு என் வாழ்வு முடிந்தது என்று அலறிய வண்ணம் அனற்பிழம்பானேன்.

இத்துடன் என் வாழ்க்கையும் முடிந்தது.

10 "D"

இ. இலட்சுமிகாந்தன்.

○ ⊙ ①

## இயற்கை முறை

நாம் தமிழ் மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறுதலே சிறப்பு. அதுவே இயற்கைமுறை.

— மணிமொழி.

# மின்சாரமும் மனித வாழ்வும்

கல் தோன்றி மண் தோன்றிய காலம் தொடங்கி உற்பத்தியான மனிதன் தன் கடின உழைப்பையே காரணமாகக் கொண்டு வந்தான். கடும் உழைப்பின் காரணமாகக் காற்றோடு காற்றையும் மண்ணோடு மண்ணையும் விண்ணோடு விண்ணையும் தன் சூழ் நிலையை மாற்றி இயற்கைக் கேற்றவாறு வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வாழ்வில் காட்டு விலங்குடன் போராடிய மனிதன் அதனைக் கொல்ல ஈட்டியையும் கண்டுபிடித்தான். பின் சடுதி நிலைமையால் மாற்றங்களுக்குள்ளாகிக் காணப்பட்ட மாறுதல்களே விஞ்ஞான வளர்ச்சியின் ஆரம்ப நிலையாகும். விஞ்ஞான வளர்ச்சியிலே மனிதன் வாழ்வு மலரத் தொடங்கிய கட்டமே ''விஞ்ஞான சகாப்தம்'' என அழைக்கப்படுகிறது.

காலப்போக்கிலே விஞ்ஞான விருத்தியைக் கண்டு, மனிதன்வாழ்வு மலரத் தொடங்கியது. விஞ்ஞானத்தில் முற்பட்ட மனிதனை மேலும் ஊக்கங் காட்டச் செய்த அரிய சாதனந்தான் மின்சாரம். மின்சாரம் எப்பொழுது மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டதோ அன்றே இயற்கையை எதிர்க்கும் சக்தி மனிதனுக்கு ஏற்பட்டது. இத்தகைய மின்சாரக் கண்டு பிடிப்பாலேயே மேலைத் தேசங்கள் முன்னேறிக் கொண்டன. உண்மை உழைப்பைக் கொண்டும் தன்னிலைமை குன்றாத மனிதனுக்கு மின்சாரம் அவன் வாழ்வின் அத்தியாயத்திலே இடம்பெற வேண்டியதாயிற்று. பழமையை நோக்கின் முன்பெல்லாம் நாம் எத்தொழில் புரியப்போகினும் கஷ்ட நிலைமை காரணமாய்த் தொழில் வளம்பெற முடியாது இடர்பட்ட நாலேயே தொழில் நிலையங்கள் எல்லாம் ஸ்தம்பித்துக் கிடந்தன. வலுவற்ற பாமரர் வாடி வதங்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. கொழுத்துவாழும் பஞ்சமனமெத்தை வாசிகளெல்லாம் வறுமையுடன் போராடிய மக்களை வாட்டி வேலை வாங்கிக் கொண்டு இருந்தனர். எனவே விரட்ட வேண்டிய நிலைமையில் முதலாளி — பிறந்து வாடவேண்டிய நிலைமையில் தொழிலாளி.

இந்நிலைமையை மாற்றங் காணச் செய்து மக்கள் வாழ்வை மலரச் செய்து தண்ணொளியால் விண்ணிலே விளங்கும் மின்சாரத்தை மனித வாழ்வு என்றும் மறக்க முடியாது. ''லூயிஸ் கால்வனி'' யாற் கண்டு பிடிக்கப்பட்ட மின்சாரம் ''பரடே'' போன்றோராலேயே வளர்ச்சி அடைந்தது. ''பரடே'' கொண்ட மின்சார உபயோகத்தின் காரணமாகவே மனிதவாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் நின்று உதவுகின்றது. இன்றும் சுருங்கக் கூறின் உலகின் நவீன வளர்ச்சி மின்சார சாதனை மூலமே எனலாம்.

இன்றெல்லாம் வீட்டிற் பிரகாசிக்கும் மின்விளக்குகள்; வீதியில் நடமாடும் வாகனங்கள்; மனிதனால் தொழிற்படும் பேராலைகள்; இறைக்கும் யந்திரங்கள் போன்ற இன்னும் எத்தனையோ சாதனங்கள் உதவுவது மட்டுமன்றி பண்டை நாளில் உயிருடன் போராடிய உறுபிராணிகளுக்கெல்லாம் இன்று மின்சிகிச்சை கொண்டு கண் இமைப்பொழுதில் வெற்றிகாணும் பேறு மின்சக்தி மூலமேயாம். இன்றெல்லாம் இயற்கையை மாற்றிக் காற்றைப்பெறுகின்றன. போக்குவரவு முறைகளை மாற்றி அமைத்துக்கொண்டு சுக வாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பதே மின்சாரத்தின் பெருஞ்செயலாகின்றது. ஆராய்ந்து நோக்கின் எண்ணிலடங்காச்சாகசம் புரியும் மின்சாரம் இன்னும் பலவழிகளிலே எமக்கு உதவுகின்றது. கணக்கியல் போன்றவைகளை மனிதன் கணித்துக் கூறுவதற்கு முன்பு மின் துணைகொண்டு அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாது தட்டச்சுக்களெல்லாம் இயக்கப்படுவதும் மின்சக்தியினாலேயே.

ஏன்! இன்று இயன்றவரை இயற்கையுடன் போராடி வரும் பொது உடைமை ருஷ்யா போன்ற நாடுகள் மூடக்கொள்கைகளை எல்லாம் குழி தோண்டிப் புதைக்க முற்படுவது விஞ்ஞானத்தின் கோலமே. இயற்கையில் இருந்த எண்ணங்கள் மாறி வளரத் தொடங்கியது மின்சாரத்தினாலேயே. இன்றைய மனிதன் விண்வெளி ஏகி அகில உலகத்தைக் கண்டு ஆசிச் செய்திகள் அனுப்பி செய்திகளை நவின்று கொண்டு இருக்க உதவுவது மின்சக்தியே. எனவே விஞ்ஞானத்துடன் மின்சாரமும் சேர்ந்து மனித வாழ்வில் பின்னிப் பிணைந்து வளர என்று ஆரம்பித்ததோ அன்றே மனித வாழ்வு மாற்றப் பாதையை நாடியது. ஆயினும் நம்நாட்டில் இத்தகைய கண்டு பிடிப்புக்கள் பெரு வினோத நிலைமையையே உண்டாக்குகின்றன. மேல் நாட்டில் மின்

துணைகொண்டுகாலனுடன் போராடி உயிர் மீட்டு இனப்பெருக்கம் ஏற்படும் நேரத்திலே நம் நாட்டில் காலனுடன் செல்ல மின்சாரத்தின் துணையை நாடி நிற்பது விசனிக்கத்தக்கதாகும். மனிதன் ஆறு அறிவுபடைத்தவன். அவனின் சிந்திக்கும் ஆற்றல் அவனின் சிறந்த குணமாகும். ஏனைய உயிரினின்றும் வேறான அறிவாகிய பகுத்தறிவு படைத்தவன்.

அதோ அந்தச் சின்னஞ்சிறு சிலந்தி எவ்வளவு சிரமப்பட்டுச் சிறிய வாயிலிலே நுண்ணிழைகளை ஆக்கி தன் இடத்தைச் சிறப்பிக்கின்றது. பெரு முயற்சியால் ஏனைய உயிர்களைக் கவர்ந்து கொள்ளவே உருவாக்கியது. அந்த நிலைமை தனக்கும் ஆகிவிடும் என்பதைத்தான் நாளிலும் எண்ணுது என்றே ஆக்கிக் கொண்ட அந்த நுண்ணிழை வலைகள் மூலம் சிக்கித் தவித்து இறந்து விடுகின்றது. அதுபோன்ற பகுத்தறிவால் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் கண்டு அநுபவிக்கத் தெரியாது மனிதன் அவஸ்தைப்படுகின்றான்.

தன்னைப் பாதுகாப்பதற்கென எழுந்த மின்சாரம் சத்துருவையும் அழிக்கக் கையாளப்படுகின்றது. இயந்திர சாலைகளில் புகுந்த மின்சாரம் கடினமான வேலைகளைத் தமதாக்கிக் கொண்டு மனிதனைச் சோம்பித்திரிய வைத்ததோடு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உண்டாக்கி விட்டது. மின்சாரம் வாழ்வின் உயிர் நாடியாக இருக்கின்ற பொழுதிலும் மனிதன் கவலையில் மூழ்கிறான். அணுச்சக்தியால் செயற்கை மழை பெய்யச்செய்யலாம். ஆனால் அந்த அணுசக்தியே நெருப்பு மழையையும் பெய்யச் செய்து உலகத்தையே அழிக்கும் ஆற்றல் நிறைந்தது. இவ்வாறு கூறும் பொழுது மனிதனின் உள்ளம் கவலையால் சூழப்படாமல் இருக்க முடிவதில்லை.

எனவே இயற்கையின் சக்திகளை மின்சாரத்தால் அடக்கி நம் நாட்டுக்கும், சமூகத்துக்கும், மனித வாழ்க்கைக்கும் பயனை விளைவிக்கக் கூடிய மின்சாரம் மனித வாழ்க்கையை வளப்படுத்துவ தோடமையாது சந்திர மண்டலத்தை மட்டுமன்றி தேவலோகத்தைக் கூடக் கண்டுபிடிப்பதுடன் உலக வாழ்வும் என்றும் அழிவுறாத அமர வாழ்வாக இருக்குமென்பது மறுக்க முடியாத முடிபாகும்.

சு நாகரத்தின பூபதி
வகுப்பு "10"

# அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது ஆன்றோர் முதுமொழியாகும். இது முற்காலத்தில் மட்டுமல்ல தற்காலத்திலும் பயன்படுகிறது. இதன் பொருளை உணராத மக்கள், தாங்களே தங்கள் நிலையைக் கெடுத்துக் கொள்கிறார்கள்.

இம் முதுமொழியின் பொழிப்பில் இருந்தே நாம் நமது வாழ்க்கைக் குறைகளை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். அதாவது எமது வாழ்வின் இடையேயுள்ள சிக்கல்களை நீக்கி மற்றையவர்களின் உதவியோடும் எமது தேசிய மக்களின் எண்ணங்களின் உதவியோடும் வாழ்க்கையைச் சமூக வாழ்க்கையாகச் சிறப்பு அடையச் செய்யலாம்.

நாம் நமது வாழ்க்கை முறையைச் சிறப்பாக முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டுமாயின் மற்றவர்களையும் ஒற்றுமையாக்கி அவர்களது கொள்கைகளையும் எமது தேசியக் கொள்கைகளையும் எடுத்து ஆராய்ந்து இரண்டு பகுதிக்கும் இடையில் உள்ளதும் சமூக முன்னேற்றத்தைக் கூட்டக் கூடியதுமான கொள்கையையே மேற்கொண்டு அக் கொள்கையின்படி மக்களை ஊக்குவித்துச் சிறப்படையச் செய்ய வேண்டும்.

இத் தேசிய கொள்கைக்கு முரணை வேறு கொள்கைகள் ஏற்படுமாயின் அதனால் மக்கள் சமுதாய நலனும் பாதிக்கப்படும் என்பதற்கு ஐயமில்லை. இக்கொள்கையை மக்களிடையே புகுத்தி அவர்கள் சமுகத்தை ஒற்றுமையடையச் செய்வோமாயின் சமூகம் முன்னேற்றம் அடைவது மாத்திரமன்றி தேசியம் ஒற்றுமை அடையும் என்று நம்புவதற்கு ஒருவித தடையும் இல்லை.

இக் கொள்கையை நிலைநாட்டும் பொருட்டு நாம் எதிரிகளுடன் எதிர்த்து நிற்போமாயின் தேசிய கொள்கையின் முன்னேற்றமும் வளர்ச்சியும் நாசப்பட்டொழியாது தளிர்விட்டும் வளரும். இந்நிலையை ஏற்படுத்தும்போது எம் சமூகத்தி

விடையிலாயினும் தேசிய சமூகத்தி விடையிலாயினும் பொருமை என் னும் பெரிய நெருப்பு சுடர்விட்டு எரியுமாயின் நாட்டின் கொள்கை யையும், வளர்ச்சியையும் முன்னேற் றம் அடையச் செய்ய முடியாது. இங்கு பொருமை என்னும் கொடிய நெருப்பே சமுதாய நலனைக் கெடுப் பதற்கு ஊன்று கோலாக இருக்கும்.

மக்கள் சமூகமும் நாட்டின் கல்வியும் முன்னேற்றம் அடைந்து விளங்கவேண்டு மாயின் தேசிய எண்ணங்களே நாட்டுக்கேற்ற முறையிலும் மக்களின் நன்மை யை நிலைநாட்டும் முறையிலும் அமைக்க வேண்டும். அந்நிலையில் மக்கள் அறிவைப் பாதிக்காமல் தேசிய கொள்கையைப் பூர்த்தி யாக்கி நாட்டின் நன்மையை யும் சமூகத்தின் நன்மையையும் சிறப்பிக்கும் பொருட்டு நாட் டின் சிறப்பு மேன்மேலும் விருத்தி யாகும்.

வாழ்க்கை முறையும் சமூக முன் னேற்றமும் குறைவின்றி மேலோங்க சிறிய எண்ணங்களாலுலும் அவை உறுதியான எண்ணங்களாகவும் எடுக்கப்படுமாயின் பலன் கூடுதலா கக் கிடைக்கும். அதாவது இம்முன் னேற்றத்தால் சிறந்த புகழும் உயர்ந்தநிலையும் நாட்டில் நிலவும் என்பதும் ஐயமில்லை.

அடம்பன் கொடியானது மிக வும் மென்மையாக இருந்தபோதி லும் பலகொடிகள் பின்னிப் பிணைந் திருக்குமாயின் அவை மிகவும் வலிமையுடையனபோலத் தேசப்பற் றும் தேச உணர்ச்சியும் மக்களின் கொள்கையும் ஒன்றுபட்டுத் திரண் டிருந்தால் அது எமது நாட்டின் வேறு பிரிவுகளாலும் மற்றும் தேசங் களாலும் முறியடிக்கப்படாமல் காப் பாற்றப்படும்.

இன்னும் திரண்ட அடம்பன் கொடியைப்போன்று தேசிய மக்க ளின் எண்ணங்களும் கொள்கைகளும் நிலைக்குமாயின் எமது வாழ்வீற்கோ நாட்டின் முன்னேற்றத்திற்கோ பயப் படவேண்டியதில்லை. இன்னும் சிறப் பாகக் கூறுமிடத்து நாட்டின் அமை திக்கும் கல்வி அறிவுக்கும் தடையில் லாது நிகழும். இவ்வாறு திரண் டிருக்கும் எண்ணங்கள் பயனற்றவை யாயின் பிற நாட்டினரால் பாதிக் கப்படுவது மட்டுமன்றி இகழ்ச்சி யடைய வேண்டி நேரிடும்.

ம. தாரணி

"10 - D"

# வாழ்க்கைப் பாதையிலே

வாழ்க்கையென்பது உணர்ச்சி மிக்கவர்களுக்குக் கவலையாகத் தெரி கிறது. அறிவுமிக்கவர்களுக்குத் தத் துவமாகத் தெரிகிறது. வாழ்க்கை வாழ்வதற்குத்தான்; சாவதற்கல்ல. வாழ்வென்பது சிலர் எண்ணுவது போல் தோன்றி மறையும் மின்னலு மல்ல, அதைப் போல் நிலையில்லாத துமல்ல. உலகில் தோன்றும் எந்த உயிரும் வாழ்வதற்காகவே பிறக்கின் றது. இறைவனின் சிருட்டியிலே மனிதன்தான் கிரீடம் போன்றவன். மனிதனாகப் பிறந்தால் மட்டும் போ தாது. மனிதன் மனிதனாக வாழவும் வேண்டும்.

மனிதன் மனிதனாக வாழவேண் டுமென்றால், வாழ்க்கை யென்றால் என்ன? அந்த வாழ்க்கை நடந்து செல்லும் பாதை எப்படியானதாக அமைக்கப்பட வேண்டும் என்ப தைச் சிந்திக்க வேண்டும். இந்த உலகத்திலேயே ஒருவன் தனது வாழ்க்கை செல்லும் பாதையைப் பற்றி ஆராய்வதுதான் மிக ஆழ மானதும் மிகக்கஷ்டமானதுமான தொரு ஆராய்ச்சியாகும். இந்த ஆராய்ச்சியே எமது சிந்தையிலிருந்து எப்பொழுதும் சிதறிக் கொண்டிருக் கும் எண்ணங்கள் என்றும் சொல்ல லாம். ஒருவன் எண்ணும் எண்ணங் களே அவனை உயர்ந்தவனாகவோ, தாழ்ந்தவனாகவோ மதிக்கச் செய் கின்றன. ஆகவே எவனொருவன் தனது வாழ்க்கைப் பாதையை உயர்ந்த எண்ணங்களால் ஆக்கு கின்றானோ அவனது வாழ்வே இன்ப மாகவும், வளமுள்ளதாகவும் இருக் கும். வாழ்க்கையைப் பெற்றால் மட் டும் போதாது, பெற்றவாழ்வு பெரு வாழ்வாகத் திகழமுயலவேண்டும். சிந்தனைசெய்யும் மனிதனின் பேச்சு, நிதானம் என்ற அத்திவாரத்தில் அமைந்திருக்கும்.

''வாழ்வை நேசிக்கவும் வேண் டாம். வெறுக்கவும் வேண்டாம். வாழ்க்கை செல்லும் பாதையை மட்டும் கரடுமுரடற்றதாக அமைத்து நன்றாய் வாழ்க'' என் பது ஆங்கிலக் கவிஞன் மில்ட்டனின் கூற்றாகும். ''இப்படி ஒவ்வொரு வரும் தமது பாதையைப் பண்படுத் தியதொன்றாகச் செல்வனே நாடாத்து வானையின் நல்லதொரு சிறந்த சமு தாயம் உருவாகுமென்பதில் என்ன சந்தேகம்? இந்தவகையான சமுதா யம் உருவாகும்போதுதான் இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் தான்மட்டும் வாழ்ந்தாற் காணாது;

மற்றவனும் வாழவேண்டும் அதுவும் தன்னைப்போல் இன்பமாக வாழ வேண்டும் என உயர்ந்த நல்ல எண் ணமும் உதயமாகின்றது.

இன்பமாக வாழ வழி வகுக்கக் கூடிய ஏதுக்கள் எத்தனையோ இருந்த போதிலும் வாழ்க்கைப் பாதையைச் சரியாக அமைக்கத் தெரியாத கார ணத்தால் வாழ்க்கையைத் துன்ப மாக ஆக்கிக் கொள்பவர்கள் எத் தனையோ பேர். வறுமையும் கஷ்ட மும் சூழ்ந்திருந்த போதிலும் புன் னகை பூத்துச் சிரித்து வாழ்பவர்கள் எத்தனையோ பேர். இவர்கள் தான் துன்பத்தைப் புன்முறுவலுடன் அலட்சியஞ் செய்து சந்தோஷமாய் வாழ்பவர்கள். வறுமையிலும் இன் பமாக வாழலாம். மல்லிகைக்கொடி பளிங்குக் கல்லால் ஆன கம்பத்தில் படர்ந்தால் தான் மலரும் என்ப தில்லை 'மனங் கொண்டது மாளிகை' நரகத்தைக் சுவர்க்கமாக்குவதும் சுவர்க்கத்தை நரகமாக்குவதும் மனந்தான்.

வாழ்க்கையென்பது சிலர் எண் ணுவதுபோல் துன்பம் நிறைந்தது என்று எண்ண வேண்டியதில்லை. ஆனால், வாழ்க்கைப் பாதையை அமைப்பதும் எளிது என்று எண்ணு வதும் தப்பான எண்ணமாகும். இந்தப் பாதையிலே விழிப்போடு வழி மேல் விழிவைத்துச் செல்ல வேண்டும் என்பதை எவரும்உணர்ந்து நடத்தல் சிறந்ததாகும். இதனை எங்ஙனம் அமைக்கவேண்டும் என்று தெரிந்து நடப்பதுதான் அறி வுடைமை.

செ. உருத்திரகுமாரி
"10—G"

## ஆண்டவன் அவதாரங்களா?

கல்வியாலோ, மருந்தாலோ, மந்திரத்தாலோ வேறு எதனாலோ ஏற்படுத்த செல்வாக்கால் எத்தனைப் போலிச் சந்நியாசிகள் கடவுள் அவ தாரங்களாக உலகில் போற்றப்படுகிறார்கள்? இவ்வறியாமை என்று உலகைவிட்டு அகலுமோ? உலகம் என்று உய்யுமோ! ஆண்டவனே!

— மனிமெகலி.

# நான் விரும்புவது ஆசிரியத் தொழிலே

உலகில் மக்கள் பல தொழில் களைச் செய்கிறார்கள். சிலர் சில தொழில்களை விரும்பிச் செய்கிறார் கள். சிலர் அத்தொழிலை விரும்பா விட்டாலும் அத்தொழிலினால் வரும் ஊதியம் கருதிச் செய்கிறார்கள். நான் எத்தொழிலைச் செய்யலாம் என்று கல்வி பயிலும் காலத்திலேயே சிந்திப்பேன். என்னுடன் கல்வி பயிலும சக மாணவர்களிற் சிலர் தாம் வைத்தியத் தொழில் புரிய விரும்புவதாகச் சொல்வார்கள், சிலர் குமாஸ்தாத் தொழில் புரிய விருப்புவதாகச் சொல்வார்கள். சிலர் வியாபாரத் தொழில் செய்ய விரும்புவதாகச்சொல்வார்கள். சிலர் தொழில் நுட்பக் கல்வி பயின்று பொறியியல் (என்சினியர்) தொழில் செய்ய விருப்புவதாகச் சொல்வார் கள். ஆனால் நான் ஆசிரியத் தொழில் புரிய விருப்புவதாக சக பாடியருக்கும் கூறுவேன்.

நான் ஆசிரியத் தொழில் புரிய விரும்பியதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆசிரியர் என்பதன் பொருள் குற்றம் இல்லாதவர் ஆகும். குற்றம் இல்லாதவர் என்று கூறும்பொழுது உயர்ந்த பண்புள் ளவர்களைக் குறிக்கும். ஆகவே ஆசி ரியரின் உயர்ந்த பண்புகளாவன, அன்புடமை, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன வாகும். ஓர் உத்தம ஆசிரியர் இடத்து இப்பண்புகள் இயல்பாகவே அமைந்திருக்கும் என்பது வெள்ளி டைமலையாகும். திருமதி பாலாம் பிகை என்னை 8—ம் வகுப்பில் கல்வி கற்பித்தார். அவர் மாணவர்களா கிய எங்களிடத்து மிகுந்த அன் புள்ளவராகவும் விளங்கினர். அவருடைய உத்தம குணங்களெல் லாம் என் மனத்தைக் கவர்ந்தன. அவர் எங்களுக்கு கல்வி கற்பிக்கும் உற்சாகமும் என் மனதை மேலும் கவர்ந்தது. அதனால் நான் விரும்பிய தொழில் ஆசிரியத் தொழிலாகும்.

ஆசிரியத் தொழில் ஒரு விளக் கில் இருந்து பல விளக்குகளுக்கும், பல விளக்குகளிலிருந்து மேலும் பல விளக்குகளுக்கும் ஒளி ஏற்றுவது போன்ற சிறப்புடையதாகும். ஒரு உத்தம ஆசிரியன் தனது கல்வி கற் பிக்கும்காலத்தில் பல மாணவ பரம் பரையை தோற்றுவிக்கிறான். அம்

மாணவர் பரம்பரையில் பலர் ஆசிரியர்களாக வந்து மேலும் பல மாணவ பரம்பரையை தோற்றுவிக்கின்றனர். அதனாலேயே மக்களாகப் பிறந்தவர்கள் ஆசிரியத் தொழிலினால் ஊன் கண்கள் இரண்டைவிட ஞானக் கண்ணை அறிவைப் பெற்று உத்தமராக வாழ்கிறார்கள். யானும் ஆசிரியை ஆனால் ஓர் உத்தம சமூதாயத்தை ஆக்கஞ் செய்யலாம் என்றே ஆசிரியத் தொழிலை விரும்பினேன்.

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் சகடக்கால் போல் வரும். ஆனால் நாம் ஒவ்வொருவரும் துன்பம் வரும் பொழுது வெறுப்படைவோம். இன்பம் வரும் பொழுது மகிழ்ச்சி அடைவோம். ஆனால் துன்பம் வருங் காலத்திலும் ஒரு ஆசிரியன் தனது மாணவரைக் கண்டு அவர்களைக் கற்பிக்கும் பொழுது அவர்களுடன் அளவளாவும்போதும் அத்துன்பங்களை மறந்து விடுகிறான். ஆசிரியன் மாணவர் மத்தியில் இருக்கும் காலம் மகிழ்ச்சியான காலமாகும். அதனாலும்தான் ஆசிரியத் தொழிலை விரும்புகிறேன்.

மற்றைய தொழிலிலே உள்ளவர்கள் பெரும்பாலும் அவர்கள் தொழில் ஆரம்பித்தகாலம் முதலாக மேலும் கற்பதை நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் ஆசிரியன் மாணவர்களுக்கு சிறந்த கல்வி கற்கும் நோக்கமாக அவன் தொழில் புரியும் காலம் வரையும் கற்றுக் கொண்டு இருக்கிறான். தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பு ஆசிரியனைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது என்றே உறுதியாகக் கூறலாம். நானும் எனது சேவிய காலம்வரையும் கற்கும் விருப்புடையேன். நான் ஆசிரியைத் தொழிலை மேற்கொள்வதால் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்புடையேன் என்று கருதினேன். இக் காரணத்தினாலும் ஆசிரியைத் தொழிலை விரும்புகிறேன்.

"தோன்றிற் புகழொடு
தோன்றுக
அஃதிலார் தோன்றலில் தோன்
றுமை நன்று".

என்று வள்ளுவப் பெருந்தகை வாயார அருளினார். ஒருவன் புகழுடன் வாழ்வதற்கும் ஆசிரியத் தொழில் அரும்பெரும் சாதனமாகும். நான் மகிழ்வோடும், புகழோடும் வாழ விரும்பிய காரணத்தால் ஆசிரியத் தொழிலை மனமார விரும்பினேன்; விரும்புகின்றேன்.

க. பொ. த. உயர்தர (கலை வகுப்பு)
1-ம் வருடம்
த. மனோன்மணி.

# கல்வி

அன்றும், இன்றும், என்றும் இடையறு இன்பம் தரும் பொருள் — செல்வம் கல்விச் செல்வம் ஒன்றேதான். வாழ்ந்த இடத்தில் நிலைப்பையும், சென்ற இடத்தில் சிறப்பையும் தரும் நிகரில்லாச் செல்வம் கல்விச் செல்வமே. செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த இக் கல்விச் செல்வம் ஏகாந்தத்தில் இன்பமும், சம்பாஷணையிற் சிறப்பும், காரிய நிர்வாகத்தில் சமர்த்தும் உண்டாகும் சிறப்பைப் பெற்றதாகும்.

கல்விச் செல்வமானது மனிதனுக்குத் தர்மத்தையும், செல்வத்தையும், இன்பத்தையும் கொடுக்கும் தன்மை உடையது. இஃதோடு உலகில் நீங்காத கீர்த்தியும் உண்டாக்கக் கூடிய வலிமையும் பெற்றது. வாழ்க்கையில் இன்பத்திலும், துன்பத்திலும் இடையறாது கைகொடுத்து உதவக் கூடியது. ஆகையால் அற்ப நாட்களே வாழ் நாட்களாகக் கொண்ட மானிடருக்கு கல்வி மிக்க உறுதுணையானதாகும்.

''கண்ணுடையோர் என்பார்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்''

என்னும் குறளிலே கற்றவர்களே கண்ணுடையவர்கள். கல்வி கற்காதவர்களின் முகத்தில் இரண்டு புண்களை உடையவர்கள் என்கிறார் திருவள்ளுவர்.

''குஞ்சி அழகும் கொடுந்தாடிக்
கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல
— நெஞ்சத்து
நல்லம் யாம் என்னு நடுவு
நிலைமையால்
கல்வி அழகே அழகு''.

என்று நாலடியாரில் கூறியதுபோல பெண்களுக்கு அவர்களது உடல் உறுப்பினால் ஏற்படும் அழகை அழகென்று உரைக்கக்கூடாது. ஆனால் கல்வி அறிவோடு கூடிய வார்த்தைகளே அவர்களுக்கு அழகென்று சொல்லவேண்டும்.

மேல் நோக்கிச் சிந்திக்கும் பொழுது ''அறிவிலார் இடத்து அழகில்லை''. என்றே கொள்ள வேண்டுமெனத் தெரிகின்றது. அறிவானது ஓர் இரத்தினக்கல் — மிக்க ஒளி உடையது. இதில் அறிவின்மை என்னும் மாசு படிந்து விடுகிறதால் அதன் ஒளி மங்குகின்றது. அதன் பிரகாசத்தைத் தெரிய வைக்க வேண்டுமானால் கல்வி என்னும்

சாணைக்கல்லே நாம் ஓயாது தீட்ட வேண்டும். அதனுல் அதன் மாசு நீங்கி அறிவு காந்தி விட்டொளிரும். மாசு ஆகிய அறிவின்மை மிகப் படிந்துவிடில் கல்வியாகிய சாணைக்கல்லில் தீட்டி எடுப்பது சற்றுக் கடினமாகவே இருக்கும். எனவே மாசு அதிகம் படிவதற்முன்பே கல்வி ஆகிய சாணைக் கல்லைத் தீட்ட வேண்டும். எனவேதான் நம் தமிழ் மூதாதை ''இளமையிற் கல்'' என்ச் சொல்லிப் போந்தார். இதை இன்றைய மானவ சமுதாயம் மிக்க கருத்தில் கொள்ள வேண்டும்.

பொருட் செல்வத்திலும் பல கோடி மடங்கு சிறப்புடைய கல்விப் பொருளையே நாம் முழு முயற்சியோடு சம்பாதித்துக் கொள்ள வேண்டும். கல்வி ஒளியைப் போன்றது. பொருட் செல்வம் இருளைப் போன்றது. கல்வி புத்தியை வளரச் செய்யும். (பொருள்) செல்வம் கல்வியைத் தளரச் செய்யும். கல்வி மேலே ஏறச்செய்யும் ஏணியைப் போன்றது. செல்வம், வெளியில் நிற்பவரை நீரினுள் இழுத்து, அமிழ்த்தும் மூதலையைப் போன்றது. கல்வி உபகாரங்களை வருவிக்கும் சக்தி வாய்ந்தது, செல்வம் அபகாரங்களை வருவிக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. கல்வி கொடுக்கக் கொடுக்கப் பெருகும் தன்மை உடையது. தீயினுலோ, நீரினுலோ, கள்வரினுலோ இன்னும் வேறு எவற்றினுலோ அழிக்க முடியாத சக்தி வாய்ந்தது. ஆனல் (பொருள்) செல்வம், தீயினுல், நீரினுல், கள்வரினுல் பிறருக்குக் கொடுப்பதனுல் அழிந்தொழியக் கூடிய சக்தி வாய்ந்தது. ஆதலால் தான் எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது கல்விச் செல்வமென்று பலர் கூறுகின்றனர். கல்வி என்றும் அழியாத நித்திய ஜீவனை உடையது. இத்தகைய கல்வியின் பெருமை நினைவிற்றடங்காது.

''நாற்பாற் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயினும் கீழ்இருப்பவனே''

'' அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் ''

''எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர் ''

என்பவைகளால் கல்வியின் பெருமை வெளியாகின்றது. ஆதலால் இன்று கல்லூரிகளிலும், பொது இடங்களிலும் அனுபவத்தின் மூலம் கற்பிக்கப்படுகின்ற அழியாச் செல்வமாகிய கல்வியை நாவிற் கொள்ளாது பாடசாலை நாட்களை

யோ அன்றி வாழ்நாளையோ வீணைக் குவோமாயின் பிற்காலத்தில் நாம் நமது தாய் தந்தையரை மட்டு மன்றி நம்மையும் நொந்து திரிய வேண்டிய பெரும் அவல நிலைக்குள் ளாவோம் என்பதை இளைஞர்களும் மாணவர்களுமாகிய நாம் முக்கிய மாகக் கருத்திற் கொள்ளவேண்டும். எனவே நாம் நம் சிறு பிராயத்தி லேயே,

'' கற்கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக ''.

என்று தமிழ்மறை ஆசிரியரான வள்ளுவர் கூறுவது போன்று கல்வி யைக் கற்க வேண்டும். பின் அதன் படி ஒழுக வேண்டும். அவ்வாறு ஒழுகுவோமாயின் நமது புத்தியும் யுகமும், கீர்த்தியும் வளரும். பிறை ஒரு நாளைக்குப் பூரண சந் திரனாகி எவ்வளவு பிரகாசமான ஒளியைத் தருகின்றதோ அதே போலத்தான் நாம் கற்றகல்வியும் வளர்ந்து நாம்சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்று மிக்க பிரகாசமாக ஒளி வீசும் என்று கூறுவதில் சிறி தேனும் சந்தேகப்பட இடமில்லை.

க. ஸ்ரீமதி கமலாதேவி

உயர்கலைப்பிரிவு 1-ம் வருடம்

○ ◎ ⊙

## அன்னைமொழியில் பயில்வதே அறம்

உலகைப் பலநாடுகளாக இயற்கை பிரித்திருக்கிறது. நாடுகள் பல வும் மொழிப்பெயரால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவ்வந்நாட்டின் இயல் புக்கேற்றவண்ணம் அவ்வம் மொழி அங்கங்கே அமைந்திருக்கிறது. அவ் வந்நாட்டார் அவ்வம் மொழியைப் பயில்வதே அறம். அஃதே இயற்கை யோடியைந்து நிற்பதுமாகும். பின்னே போதிய வாய்ப்பும் ஓய்வும் பிற வும் கிடைப்பின், வேறுமொழிகளையும் பயிலலாம்.

— மணிமொழி

## எளிய வாழ்க்கையும்

# உயர்ந்த நோக்கமும் அருகியது!

இன்றைய உலகம் விஞ்ஞான மயத்தில் மூழ்கி வானளாவிவளர்ந்து, கரைகடந்து பரந்து வரும்போது, நாம் எங்கும், எப்பாகத்திலும் காண்பது, அள்ளியெறியும் ஆடம்பரமும், எடுத்தெறியும் இடாம்பிகமும் நிரம்பியமையேயன்றி, ஒருவனின் வாழ்க்கை எத்தகையது? அவனின் நோக்கம் எப்படிப்பட்டது என்பதை உய்த்துணர முடியாத சந்தர்ப்பத்திற்கேற்ற நிலையை விஞ்ஞானம் நமக்குக் காண்பிக்கின்றது. எளிய பழைய முறையிலமைந்த வாழ்க்கையின் சீரிய தன்மையையும், உயர் நோக்கத்தையும் நாம் காண வழி வகுக்கவில்லை என்றே கூறலாம்.

இன்றைய சமூகம் எப்போர்ப்பட்டதாயினும் பிறநாட்டு முறையைப் பின்பற்றி அம்முறையின் நடைமுறையில் சித்தியடையாது, சிலவேளை படுகுழியில் விழுந்து இன்னற்படும் வேளையிலும், மேன்மேலும் பிறநாட்டு நாகரீகம், வாழ்க்கை முறையையே விரும்புகிறதன்றி, தாம் படுகுழியிலிருந்து விழுந்துவிட்டோம் என்றே அவற்றிலிருந்து விடுதலையடைய வேண்டிய வழியை வகுக்கு மென்றே எண்ணமுடியாது, என்றும் சுயநலப் போக்குடையதாகவே விளங்குகின்றதை எவராலும் மறுக்க முடியாது. இந்நிலையை இஸ்திரப்படுத்த வேண்டுமாயின் இன்றைய சமூகமும், வாழும் ஒவ்வொரு அங்கத்தினரும் தாம்தாம் தம் நாட்டின் சீர்கெட்ட நிலையைப்பற்றி நொந்து, உளம் வெந்து ஒரு திருத்தத்தையோ அன்றி சீர்திருத்தும் நோக்கத்தையோ கூறப்புகின் அவற்றை அச்சமூகம் ஏற்குமோ? அன்றி விலக்குமோ? என்பதை உணர்வதும் ஐயப்படுவதும் நூற்றுக்கு எண்பது வீதமும் உண்மையென இஸ்திரப்படுத்தலாம்.

இவ்வாற்றால் நாம் எடுத்துக் கொண்ட விடயத்தை ஏற்ற இரு கோணங்களினின்றும் ஆராய்வோம். முதலில் கீழ்நாட்டு நாகரீக முறையின்படி பார்ப்போமாயின் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அன்றைய நாகரீக வளர்ச்சி வேறு, இன்றைய நிலை வேறு. அன்றைய மக்களனைவரும் கலப்பில்லாத அதாவது மேலைநாட்டு நாகரீகம் கலவாத

ஆடம்பரமற்ற முறையினல் எளிய வாழ்க்கையைப் பின்பற்றினர். ஆதலினல் அன்று கடவுள் பத்தி, ஒவ்வொருவரின் குணம், கோத்திரம், பண்பு, பழக்கவழக்கம் என்பன நிலை பெற்று அழியாதிருந்தன. இதன் மூலம் அவனுக்கு ஒரு சமூகத்துடனே அன்றி வேற்றிடத்து மக்களுடனே சுமுகமாகவும் விரைவாகவும் பழகி உறவாடும் தன்மை குடிகொண்டிருந்தது. அத்துடன் எல்லோரும் சமம் என்றும் ஒருதாய் மக்கள் யாம் என்றும் எண்ணினர். இவ்விடத்தில் கடவுள் பத்தி அதிகரிக்க கல்வி முறை, அமைதியிலும், அடக்கத்திலும் வளர பிறநாடுகளால் போற்றப்பட்டது. மக்கள் யாவரும் இந்துக்களாக சைவமணங்கமழும் மனைகளில் வாழ்ந்தார்கள். ஆனல் இன்றைய உலகின் பல பாகங்களிலும் மேலைநாட்டு நாகரீகமும் சகல துறையிலும் கலப்புற்று வாழ்க்கை முறை டாம்பீகத்திலும் செல்லத் தொடங்கியது. மேலை நாட்டு மக்களின் நாகரீகம் கலப்புற நிலையான மனிதன் மதுவருந்தியதினல் ஏற்படும் நிதான மற்ற நிலையைப்போல் நிலை கலங்குகின்றது. இந்நிலையில் ஒரு சமூகம் வாழ்ந்தாலென்ன கெட்டொழிந்தாலென்ன என்ற சுயநோக்கு குடிபுகுகின்றது. எளிய வாழ்க்கை முறையில் காணப்பட்ட பழக்கங்கள் யாவும் பறந்தோடி விடுகின்றன. இவ்வித முறையில் முன்னேறியமையே இன்றைய உலக நிலை எனலாம்.

நம் நாடு நாகரீகத்தில் முன்னேறுகின்றது என்பதை உணரும் மக்கள் ஆர்வத்துடன் அதனைப் பின்பற்றுகிறார்களே யொழிய அவர்களிடம் சகலரும் சமம் என்னும் கொள்கை மறைகின்றது. ஒருவன் ஒருவிதத்தில் சிறிது முன்னேறிவிட்டால் அவனைப் போலவே நாமும் முன்னேறவேண்டும் என்னும் எண்ணம் பிரலாபிக்கின்றது. மக்கள் வாழும் மனைகளில், சைவமணங்கமழ்ந்த இடத்தில் அடக்கம் கெட்டு ஆடம்பரம் நிலைபெற்று விடுவதில் பணமும், உழைப்பும் மறுவுலக வாழ்க்கைக்கும், கடவுட் பக்திக்கும், வழி தேடாது படமாளிகையிலும், பொழுது போக்கும் மண்டபங்களிலும் நிழலாடுகின்றது. பழைய நாளில் பண்டைய ஒழுக்கத்தில் நடைபெற்ற நாடக மேடைகளில் இன்று அறிவும், அறவொழுக்கமும் கைவிடப்பெற்று ஆட்டமும், பாட்டமும், கூத்தும் நிறைந்த அரங்கமாக மாறுவதனை நாம் படிப்படியாகக் காணமுடிகின்றது.

விஞ்ஞானம் வானளாவும் இந்நாளில் நாம் கைக்கொள்ளுவது மிகச்சார உபயோகமும், இன்னும் முக்கியமாக நம்பிக்கையற்ற கொள்கை

யுமாகும். அதாவது இன்று சந் திரனில் காலடி வைத்து மகத்துவம் கொண்டாடும் வேளையில் அன் று சந்திரனே தெய்வம்போல் பூரித்த மக்களின் தெய்வீகக் கொள்கைகள் பல்வேறு வகையில் மாறுபட மக் களின் கெள்கைகளும், நோக்கங் களும் ஆடம்பரத்தில் மூழ்குகின்றது. இன்னும் கூறப்புகின் அன்று அக் கினியைத் தெய்வமாக்கிய நாம் இன்று விஞ்ஞானமூலம் மின்சார உபயோகத்தில் அதனைத் தவிர்க்கி றோம். எனவே தெய்வ பக்தியின் மகிமை குன்றுகின்றது.

S. Saraswathy; M. Thiraviam; N Kamala

*Back Row:* (L to R) N. Sivaseelan; T. Murugesu; S. K. Somanader; I. Siva
R. Manoharan; S. Selvaskantharajah; I. Sivaloganatha

# SCHOOL PREFECTS

kadevi; N. Sathianathan; R Mathivathana; K. N
rose (Head Girl); S. Sivabalan; R Suthanthiradev
o R) K. Nirmaladevi; P. Thilagavathy; N. Vasa
S. Saraswathy; M. Thiraviam; N Kamalai
aseelan; T. Murugesu; S. K. Somanader; I. Siva
noharan; S. Selvaskantharajah; I. Sivaloganatha

been well able to foster great orderliness in all aspects of School life among their fellow pupils. At a time of great student unrest in the rest of the country, Jaffna has remained comparatively aloof of this instability, and even when in an extreme moment of a revolting wave Jaffna Schools did experience a whiff of that breeze, our pupils displayed commendable calm and discretion. Good advice was greatly heeded and classes remained in full strength on that memorable day of a token strike!! Crisis is the test of character. Our pupils had acquited themselves well indeed.

May we, in closing, make an earnest appeal to our parents, teachers, and our student leaders to read sensibly the signs of the times; exercise their discretion with a sense of responsibility; and finally, act with mature restraint. Power is visibly passing into the hands of the younger generation. Unless there is effective guidance and efficient control by precept and example, this power unleashed will prove self-destructive. The high moral and spiritual standards of the assisted school days have proved an effective bastion against any form of indiscipline in most of our schools till now.

Continued vigilance on our part can save and strengthen the tender minds in our charge unto mature ways of life. As parents, teachers and student leaders let us gird up our lions towards a life of self-discipline, restrained speech and mature behaviour.

◉ ◉ ◉

They are not long, the weeping and the laughter
Love and desire and hate:
I think they have no portion in us after
We pass the gate.

— *Ernest Dawson*

# STUDENT CHRISTIAN MOVEMENT
# REPORT FOR 1970

With regular meetings as usual the S. C. M. has had another successful year. During this year under review we carried out a varied programme consisting of study groups, discussions on important topics, Bible quiz etc.

The important feature of the S. C. M. is the annual tea party follwed by a carol service to which the Hindu members of the Staff are also invited. We also took part in the combined Carol Service held in Jaffna.

I'll fail in my duty if I don't make a special mention of Mrs. M. Ariyanayagam who takes a keen interest in the choir practice and the Carol Service that turns out a real success by her untiring efforts. We wish her a happy future and we do hope she would continue to take interest even after she leaves us.

Let me also take the opportunity to thank our Staff Advisor committee and the staff for their guidance and valuable co-operation extended to me to successfully carry out this year's programme.

**Thayalaseelan. S.**
*Secretary*

Like the dew on the mountain,
Like the foam on the river,
Like bubble on the fountain,
Thou art gone, and for ever!

— *Walter Scott*



GIRL GUIDES

# GIRL GUIDES

Our Girl Guide Company, 11th Jaffna, was inaugurated on the 30th October 1930. We are proud to say that we have completed forty years of service. Since then the company has maintained a satisfactory standard.

The Northern District will be celebrating its Golden Jubilee shortly. Our girl Guides are now busy working towards the celebrations.

This year we have thirty-two Guides in the company. We attended the annual Girl Guide Rally held at Old Park Jaffna. Under the guidance of Mrs. P. Arulrajah the Guides contributed an item at the Rally.

Our Guides have rendered useful services to the school on several occassions. This year in particular they were of immense help to the school at the Festival of music which was held during the second term. I wish to thank all Guides who worked earnestly towards its success. My sincere thanks are due to the Patrol leaders who carried out their duties efficiently.

We are also greatful to the Principal for the keen interest he takes in us.

**Guide Captain**

A little pain, a little pleasure,
A little heaping up of treasure;
Then no more gazing upon the sun;
All things must end that have begun.

— *John Payne*

# எமது சாரணர் குழு

எங்கள் சாரணர் குழு இவ் வாண்டு மிகவும் சிறப்புடனும், ஊக்கத்துடனும் கடமையாற்றி யிருக்கின்றது. எங்கள் குழுவைச் சேர்ந்த ஆறு சாரணர்கள் ஒரு சிரேஷ்ட சாரணன் பெறக்கூடிய மிகவும் உயர்ந்த சின்னமாகிய இராணி சின்னத்தை (Queen Scout Badge) பெற்றுள்ளார்கள். யாழ் மாவட்ட சாரணர் குழுக்களுள் மிகவும் கூடிய இராணி சாரணர்கள் தொகைக்காக வழங்கப்பட்ட பரிசில் எங்கள் குழு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதென்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றோம். இவர்களின் முன்மாதிரியைக் குழுவிலுள்ள ஏனைய சாரணர்கள் பின்பற்றுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

வழக்கம்போல் எங்கள் குழு வருடாவருடம் யாழ் பழைய பூங்காவில் நடைபெறும் மாவட்ட சாரணர்களின் போட்டிகளில் பங்கு பற்றி சான்றுப் பத்திரங்கள் பெற்றுள்ளது.

எங்கள் குழு பல தொண்டுகளில் ஈடுபட்டு வருகின்றது. எமது கல்லூரியில் நடைபெறும் எல்லா முக்கிய வைபவங்களிலும் மற்றும் சிரமதான இயக்கங்களிலும் சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றியுள்ளது.

எங்கள் சாரணர்குழுவின் முன்னேற்றத்துக்காகப் பல வழிகளிலும் உதவிய யாழ்மாவட்ட சாரணர் பயிர்ச்சிக்குழுவைச் சேர்ந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

பொறுப்பாசிரியர் :

திரு. வீ. சோமசுந்தரம்

உதவியாசிரியர்கள் :

திரு. பொ. கந்தையா

திரு. எஸ். என். கணேசன்

●

## உடலும் நாடும்

ஒருவன் தனது உடலுக்கு ஊறு நிகழாதவாறு அதைக் காப்பது போலவே, அன்னன் தான்பிறந்த நாட்டுக்கும் ஊறு நிகழாதவாறு அதைக் காத்தல் வேண்டும்.

— மணிமொழி

OUR SCOUTS



X TH JAFFNA TROOP



## QUEEN SCOUTS

*Seated:* (L to R) K. Ratnakumaran; Mr. V. Somasundaram; P. Segarajasingham.

*Standing:* (L to R) T. Varatharajan (Green Cord); S. Baskaran; P. Maheswaran; T. Jeyakumar; S. Balakumar.

# எமது குருளையர்

இவ்வருடம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் குருளையர் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டிய காலமாகும். பழைய பூங்காவில் நிகழ்ந்த யாழ் மாவட்டக் குருளையர் சம்மேளனப் போட்டியில் எமது குருளையர் முதலாம் இடத்தைப்பெற்று அதற்குரிய சின்னமாகிய குக் ரோட்டம் போலெச் (Cook's Totem Pole) சுவீகரித்துக் கொண்டனர்.

இச்சின்னம் தொடர்ந்து ஏழு வருடங்களாக முதலிடம்பெற்று வந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியால் உரிமை கொள்ளப்பட்டு மற்ற எந்தக் கல்லூரியும் அதைப் பெற முடியாமலிருந்த நிலையில் எமது குருளையர் அச்சின்னத்தைப் பெற்று எம் கல்லூரியின் புகழைப் பரப்பினர். அகில இலங்கைப் போட்டியில் சென்றவருடம் முதலிடம் பெற்றதும் சிறந்த ஒழுங்கான, பல வருடங்கள் பயிற்சிபெற்றதுமான மத்திய கல்லூரிக் குருளையரைக் குறுகியகாலப் பயிற்சியோடு எமது குருளையர் தோற்கடித்துக் கிராமப்புற மாணவரின் வீரதீரத்தை நிலைநாட்டியுள்ளனர். விளையாட்டு, பாட்டு, நாடகம், கைவினை, அடுப்படி வாத்தியம் என ஐந்து பிரிவாக நடத்தப்பட்ட போட்டியில் எமது குழு விளையாட்டு, நாடகம் ஆகியவற்றில் முதலாம் இடத்தையும், கைவினையில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. இவர்களின் வெற்றியை மெச்சி எமது அதிபர் அவர்கள் எங்கள் குருளையர்க்கென ஒரு தனி அறையை உதவி உற்சாகப் படுத்தியுள்ளார்கள், கல்லூரியில் இடப்பிரச்சினை தாண்டவமாடும் இந்நேரத்தில் எமக்கென ஒரு அறையை உதவியமைக்காக அதிபர் அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அறை கிடைத்ததும் குருளையரின் குதூகலத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? மிகுந்த ஆர்வத்தோடு அதைச் சுத்தஞ்செய்து திருத்தி வேண்டிய பொருட்களைச் சேகரித்து அழகுற அமைத்துள்ளனர். குருளையர் பயிற்சியில் மிகுந்த ஊக்கங்காட்டி ஈடுபாடு கொள்ளவுந் தொடங்கிவிட்டார்கள்.

### பரீட்சைகளும் சித்தியும்

சாரணப் பரிசோதகர்கள் திரு. S. K. மூர்த்தி, திரு. R. E. இராஜ நாயகம் ஆகியோர் நடத்திய பரீட்சைகளில் சித்தியெய்திய குருளையரின் விபரம் வருமாறு :

சைக்கிளோட்டம் (Cyclist) 8 பேர்
இல்லச்சீர்மை (House Orderly) 14 பேர்
சேகரிப்பாளர் (Collector) 4 பேர்

விளையாட்டுவீரன்
(Sportsman) 13 பேர்
பிரதம சிகிச்சையாளன்
(First Aider) 5 பேர்
தோட்டக்காரன் (Gardener) 4 பேர்
வழிகாட்டி (Guide) 5 பேர்
உபசரிப்பாளன் (Entertainer) 2 பேர்

இவைகளின் தகைமையைக்கொண்டு ஒரு குருளையன் பெறக்கூடிய மிகப் பெரிய சின்னமான தாவும் ஓநாய் (Leaping wolf) சின்னம் பெற்றவர் தொகை 8.

செ. சத்தியதேவா, இ. மகேஸ்வரன், க. காண்டீபன், ச. தேவசேயன், க. கிரிதரன், இ. விஜயகுமாரன், சி. சரவணபவன், S. இரவீந்திர குமாரன்.

குருளையர் தேர்ச்சியில் முதற்படியான:—

1—ம் நட்சத்திரம் பெற்றோர் 25
2—ம் நட்சத்திரம் பெற்றோர் 18

உரிய காலத்தில் இப் பரீட்சைகளை நடாத்திய திரு. S. K. மூர்த்தி, திரு. R. E. இராஜநாயகம் ஆகியோருக்கு எம் நன்றியுரித்தாகுக.

எமது குருளையர் இரு சுற்றுலாக்களை இவ்வருடத்தில் மேற்கொண்டதோடு, பரியோவான் கல்லூரியில் நடைபெற்ற அறுவர் குழுப் பயிற்சியிலும் தேர்ச்சிபெற்றனர் பதின்மர். செ. திருக்குமாரன், மு. விக்கினேஸ்வரன், இ. யோகராஜா ஆகியோர் மிகத் திறமையாக இப் பரீட்சைகளில் ஊக்கங் காட்டியுள்ளனர். அவர்கள் வயதுகூடிய காரணத்தால் இச்சின்னங்களைப் பெறமுடியவில்லை. அவர்களுக்கும் எம் வாழ்த்துக்கள்.

குருளையர் ஒய்வு நேரத்தை மேற் கூறிய நல்வழிகளிற் செலுத்தவும், தாம் பெற்ற அறிவைப் பெற்றிருக்கும் மற்றோருக்கும் உதவி செய்வதிற் பயன்படுத்தவும், தினமும் எவருக்காவது ஒரு நற்பணி செய்யவும் வழி நடத்துமாறு பெற்றோரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

வகுப்பறை வேலைகளாற் களைப்படையும் வயது முதிர்ந்த ஆசிரியைகளாகிய எங்களுக்கு, இப்பாலரோடு ஆடுவதும், பாடுவதும், விளையாடுவதும் அயர்வை நீக்கி உற்சாகத்தைக் கொடுப்பதும், முதுமை உணர்ச்சியை வரவொட்டாது இளமை உணர்ச்சியை நீடிக்கச் செய்யும் ஔடதங்களாக அமைந்துள்ளன. இறைவனால் அருளப்பட்ட இவ்வரிய வாய்ப்புக்கு அவருக்குத் துதி செலுத்துகின்றோம்.

எமக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளையீந்து உற்சாகமூட்டும் எம் அதிபர் அவர்களுக்கும் குருளையர் சார்பில் நம் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வணக்கம்.

குருளையர் வாழ்க.

வேதவல்லி கந்தையா
(குருளை ஆசிரியை)
சிவமணி ஆறுமுகம்
(உதவி ஆசிரியை)

---

OUR CUBS





யாழ்–மாவட்ட விழாவில் முதலிடம் பெற்ற கோப்பாய் கிறிஸ்தவகல்லூரிக் குருளையர்
பழைய பூங்காவில் அசோலா தலைவர் திரு. ஆபிரகாமும்
மாவட்ட ஆணையாளருடனும் காணப்படுகின்றனர்.

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

# இந்து மாணவர் மன்றம்

---

போஷகர்: அதிபர் அவர்கள்

தலைவர்: செல்வன்
த. முத்துக்குமாரசாமி

உபதலைவர்: செல்வன்
க. நவரட்ணம்

செயலாளர்: செல்வன்
ச. சிவபாலன்

உபசெயலாளர்: செல்வி
பொ. மங்கையர்க்கரசி

பொருளாளர்: செல்வன்
சி. நல்லைநாதன்

நமது நாடானது அந்நியராதிக்கத்திலுள் அடக்கி யொடுக்கப்பட்டு இருந்த காலத்தில் சமயப் பூசல்கள் ஒரு புறமும், சமயத்தையும் வழி பாட்டையும் ஒதுக்கி ஒடுக்கிய நெருக்கடி ஒரு புறமும், மக்கள் அந்நிய மோகங்கொண்டு சமயாசாரங்களை மறந்து துறந்து வாழ்ந்தது ஒரு புறமும் இருக்க, இத்தகைய மோதல்களுக்கிடையில் அவ்வக் காலங்களில் அருள் நெறிச் செம்மல்கள் தோன்றி சமயாசார முறைகளை தர்க்கமான ரீதியில் புகட்டி வந்த போதிலும் மன்றங்களை அமைத்து சமயாசாரங்களை வளர்க்கும் முறை எமது சைவ சமயத்துக்கு இருந்திருக்கவில்லையென்பதை அனுபவவாயிலாக அறியாத போதும் நூல்களிலிருந்து மீட்டு அறியக்கூடியதாக இருந்தது.

ஆனால் இப்போது மன்றங்களை மனப்பூரிப்புடனும், சகலரின் ஒத்துழைப்புடனும் நிறுவி சமயாசார வழிபாட்டு முறைகளையும், கோட்பாடுகளையும் சைவமக்களிடம் ஏற்படுத்தக்கூடிய நவீன காலமிதுவாகும். இப் பொற்காலத்திலும் எமது கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளும் மதத்தில் தர்மம் ஊன்றியுள்ளது. உலகம் நீதிக்கும் தர்மத்துக்கும் உட்பட்டுள்ளது. ''மேன்மை கொள் சைவநீதி'' என்று புகழப்படும் இந்து மதமே நீதி நெறிதான் என்பதை உணர்ந்து, இந்நீதிமொழுக்கங்களிலிருந்து வழுவுதல் இனத்தையும், மக்களையும், மாணவர்களிடையே கலாச்சாரத்தையும் அற்றுவிடச்செய்யும் என்னும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டு பலகாலமாக நற்பண்புடன் இயங்கி வரும் எமது இந்து மாமன்றத்தின் இவ்வாண்டறிக்கையை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன்.

மேற்கூறிய நோக்கத்தை அகத்தில் கொண்டு இம்மன்றத்தை நன்முறையில் இயக்கிவிட வேண்டுமென்ற விடாமுயற்சியின் பேறு அதன் இலட்சியத்தில் பெரும்பகுதியை பூரணமாக்கிவிட்டதென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

நாட்கள் கடந்துவரும் நாயன்மார்களின் குரு பூஜைகளையும், நவராத்திரி போன்ற விழாக்களையும் எமது மன்றத்தின் விருப்பத்திற்கிணைய நடத்தி பெரும் வெற்றியடைந்தது. அத்துடன் சைவப் பேரறிஞர்கள், தத்துவ ஞானிகள் போன்றவர்களை அழைப்பித்து அவர்கள் மூலம் கற்கால, தற்கால முறைகளில் சமயம் அடைந்த வீழ்ச்சி, உயர்ச்சி என்பவைகளும் நாயன்மார்கள், சந்தான குரவர், போன்றவர்களின் அருள் நெறி கொண்ட மார்க்கமும் அதன் பயனை அருட் செய்கைகளையும் அறிவைக் கடக்கக் கூடிய வகையில் அளந்துவிட்டோம் என்று கூறினால் அது மிகையாகாது.

தினமும் நாள் தோறும் காலை 8·35 – 8·50 வரையிலும் எமது கல்லூரியில் நடக்கும் சமயப் பிரசங்கங்களையும், சொற்பொழிவுகளையும் மாணவ மாணவிகள் கேட்டு வருகின்றனர். அத்துடன் எமது சமயத்தின் மேன்மையானது இன்றும் மேலோங்கி வருவதற்கு எமது மன்றத்தின் மூலவேராக நின்று முன்னின்று உழைத்த பண்டிதர் சி. கந்தையா அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் எமது மன்றத்தில் சைவப்பற்று மிளிரும் வகையில் ஆக்கமும் ஊக்கமும் ஏகெடுத்துதவி அயராது முன்னின்று உழைத்த ஆசிரியர்கள், நிர்வாகசபை அங்கத்தவர்கள், மாணவர்கள் அனைவரினதும் சைவப்பற்றானது கல்லூரியுடன் மாத்திரம் முற்றுப் பெறாது வாழ்நாள் முழுவதும் அணையாத தீபமாக மிளிர வேண்டுமென்று கேட்டு இதற்கு இறைவனருள் என்றும் பாலித்திட வேண்டும் எனப் பிரார்த்தித்து எனது ஆண்டறிக்கையைக் இத்துடன் முடிக்கின்றேன்.

''வளர்க சைவம்''

வணக்கம்.

ச. சிவபாலன்
காரியதரிசி

# கூட்டுறவுச் சிக்கனக் கடன் சங்கம்

இச்சங்கம் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் ஆகியோரது பிரயாசையுடன் 1961 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். தரம் 'B' நிலையில் உள்ள இச் சங்கத்தில் இன்று 36 அங்கத்தவர்கள் உண்டு. பாடசாலை ஊழியர்கள் அனைவரும் இதில் அங்கத்துவம் வகிக்கலாம்.

இச் சங்கத்தின் நோக்கம் சிக்கனத்தைப் பேணி சேமத்தை ஊக்குவிப்பதேயாகும். அங்கத்தவர்களின் தற்போதைய மாதச் சேமம் ரூபா 450/=க்கு மேற்பட்டதாகும். 24–11–70 வரை அங்கத்தவர்களின் மொத்தச் சேமம் 33,000/= ஆகும்.

அங்கத்துவப் பணம் ரூபா ஒன்று செலுத்தி ஒருவர் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெறலாம். 5 ரூபாவிற்குக் குறையாததும் அதற்கு மேற்பட்டதுமான எவ்வளவு தொகையும் ஒரு அங்கத்தவர் சேமப் பணமாகக் கூட்டி வரலாம். 6 மாதங்கள் தொடர்ந்து கட்டியபின் ஒருவர் சங்கத்தில் கடன் பெறும் உரிமையை உடையவராவர்

சங்க விதிகளுக்கமைய இச் சங்கமானது சதாரண கடன், விசேட கடன், ஆதனக் கடன் என மூன்று வகையான கடன்களை குறைந்த வீத வட்டிக்கு அங்கத்தவர்களுக்கு வழங்கி வருகின்றது. கடன் பெற்றவர் மனுப்பத்திரத்தில் குறிப்பிட்டபடி கடன் தொகையைக் திருப்பிக் கட்டிவரல் வேண்டும்.

எண் பார்வைப்படி சென்ற ஆண்டில் 52,624/= கடனுகை வளங்கியுள்ளது. இவ்வாண்டு முடிவில் 31,556/= சங்கத்திற்கு வரவேண்டிய கடன் தொகையாய் இருந்தது. இக் காலத்திற்கான சுத்த லாபம் 1729–06 ஆகும்.

சங்கம் மேலும் வளர்ச்சி அடைந்து தரம் 'A' ஐ அடைவதற்கு அங்கத்தவர்களின் உற்சாகம் நிறைந்த ஒத்துழைப்பு அத்தியாவசியமாகும். ஆகவே உரிய காலத்தில் வேண்டிய கடன் உதவியைப் புரியும் இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு அங்கத்தவர் அனைவரும் மனநிறைவுடன் கூடிய சேவையை ஆற்றுவீர்களாக.

பொ. கந்தையா
காரியதரிசி

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

# மாணவர் கூட்டுறவுச் சங்கம்

தலைவர்: அதிபர் அவர்கள்

உபதலைவர்:

திரு. S. செல்வரட்ணம் ஆசிரியர்

செயலாளர்: செல்வன் S. சிவபாலன்

உபசெயலாளர்:

செல்வி R. சுதந்திராதேவி

பரிசோதகர்:

திரு. P. கந்தையா ஆசிரியர்.

மற்றும் அங்கத்தவர்கள்

1. S. நல்லநாதன்
2. R. மதிவதனி
3. A. மல்லிகாதேவி
4. திருமதி G. N. சற்குணசிங்கம்
5. திருமதி. T. குமாரசாமி

''கூட்டுறவே நாட்டின் உயர்வு''

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு''

எமது மாணவர் கூட்டுறவுச் சங்க அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரை அங்கத்தவர்களாகக் கொண்டு எமது சங்கம் பல்லாண்டு காலமாக இயங்கி வருகின்றது. இச்சங்கமானது கல்லூரி மாணவர்கட்கும், ஆசிரியர்களுக்கும் காரியாலயத்திற்கும் தேவையான நேரத்தில் வேண்டிய உதவிகளைச் செய்வதுடன் மட்டுமல்லாது, புத்தகசாலை, போசனசாலை, விடுதிச் சாலை, ஒப்பந்தவேலைகள், கல்லூரி விவசாயப் பொருட்களை விற்பனை செய்தல், மின்சார விநியோகம் முதலான பணிகளை மேற்கொண்டு சிறந்த முறையில் இயங்கி வருகிறது. இவைகளினால் இச்சங்கம் கூடிய இலாபத்தையும் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இங்குள்ள புத்தகசாலையானது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பாடசாலைக்கும் வேண்டிய உபகரணங்களைத் தேவையான சமயத்தில் கொடுக்கின்றது. இதனால் இச்சங்கம் 1349 ரூபா 02 சதம் இலாபமாகப் பெற்றது.

இச்சங்கம் நடாத்துகின்ற போசனசாலையானது சிற்றுண்டி வகைகளையும், இனிப்புவகைகளையும் விற்பனை செய்தும் இலாபத்தை அடைந்துள்ளது. இச்சங்கத்தின் முகாமையாளரான திருமதி. த. தர்மலிங்கம் இதைப் பொறுப்பேற்று

தனது உடல், பொருள், ஆவி அத்னையும் அர்ப்பணித்து நன்முறையில் இயக்கி வருகின்றார். மேலும் போசனசாலையானது ஆசிரியர்கட்கும், விருந்தினர்கட்கும், கல்லூரி விளையாட்டு வீரர்கட்கும் தேவையான உணவுவகைகளை அளித்து வருகின்றது. விடுதிச்சாலையும் பல காலமாக நன் முறையில் இயங்கி வருகின்றது.

இச்சங்கமானது ஒப்பந்த வேலைகளையும் மேற்கொண்டு இலாபம் பெற்றுள்ளது. சங்கத்தின் உதவியால் மின்சார இணைப்பை ஏற்படுத்தி விழாக்கள், இராப்போசனம், விசேட கூட்டங்கள் முதலியவற்றுக்கு மின்சாரம் கொடுத்துதவுகின்றது.

இக்கல்லூரியையும், மாணவர்களையும் உயர்நிலையடையச் செய்வதற்கு மேலும் இச்சங்கம் பல நன்மைகளைச் செய்யும் என்பதில் தளராத நம்பிக்கை உண்டு.

இச்சங்கமானது பெற்ற இலாபப் பணத்தின் ஒரு பகுதியை சேமிப்புப் பணமாகவும் மிகுதியைக் கல்லூரியின் பொதுப்பணியில் செலவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எமது சங்கம் திறம்பட இயங்க ஊக்கமும், ஆக்கமும் அளித்த நிர்வாக சபையினருக்கும் அத்துடன் தமது நேரத்தையும் பொருட்படுத்தாது எமது சங்கக்கணக்குகளைச்சரிபார்த்து உரிய காலத்தில் சமர்ப்பித்தமைக்கு கூட்டுறவு ஆணையாளர்க்கும், எமது சங்க வளர்ச்சிக்கு ஊக்கமளித்த ஏனையோர்க்கும் சங்கத்தின் சார்பில் அன்பும் நன்றியும் உரித்தாகட்டும்.

''மேலும் மேலும் இது வளரட்டும்''
வேண்டும் வேண்டும் எனத்
தொடரட்டும்.

வணக்கம்.

ச. சிவபாலன்.
காரியதரிசி

● ● ●

## அன்பின் குறைபாடே!

தன்னுயிரைப்போல் மன்னுயிரையுங் கருதாமைக்கும், கொலை களவு முதலிய பெரும்பாவ நிகழ்ச்சிகட்கும் மூலமாயிருப்பது எது? அன்பின் குறைபாடேயாகும்.

— மணிமொழி

# உயர்தர மாணவ மன்றம்

| | | |
|---|---|---|
| போஷகர் | — | அதிபர் அவர்கள் |
| பொறுப்பாசிரியர் | | திரு. வி. சோமசுந்தரம் (ஆசிரியர்) |
| தலைவர் | — | செல்வன் க. நவரத்தினம் |
| உபதலைவர் | — | செல்வன் த. முத்துக்குமாரசாமி |
| செயலாளர் | — | செல்வன் ச. சிவபாலன் |
| உபசெயலாளர் | — | செல்வி கு. நிர்மலாதேவி |
| பொருளாளர் | — | செல்வி. ந. மல்லிகாதேவி |

''சமன் செய்து சீர்தூக்குங் கோல் போலமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி''.

மன்றம் அமைத்து மொழி, கலாச்சாரம், அறிவு, ஆற்றல் என்பன வளர்ப்பது மறைத்தமிழனின் உயிருடன் கலந்த ஒன்று. ஆயிரமாயிரம் ஆண்டுகளின் முன்பே பழக்கத்திலும் வழக்கத்திலும் நடைமுறையில் கொண்டுவந்தவர்கள் நம்மவர்கள். அன்று மன்றங்களை அமைப்பதற்கு ஒருவிதமே துணையாகநின்றார்கள். இன்று மாணவர்கள் முதற்கொண்டு பாட்டாளி மக்கள் வரையும் மன்றம் அமைத்து தமக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் உள்நின்று பெறும் வாய்ப்புகளை அடைந்துவிட்டார்கள். அதுபோல் எமது கல்லூரி உயர்தர மாணவர் மன்றமும் மாணவச் ஆசிரியர்கள் அனைவரையும் உள்ளடக்கி இயங்கி வருகின்றது. இதுபோல் இனிமேலும் இயங்குமென நம்புகின்றேன்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நமில் —
ஒற்றுமை நீங்கின்
அனைவர்க்குந் தாழ்வே'

என்றும் ஒரே நோக்கைக் கொண்டே இவ்வருட செயற் குழுவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது. இந் நம்பிக்கையைக் கருத்தில் கொண்டே செயற்குழு இயங்கி வருகின்றது என்பதைக் கூற ஆசைப்படுகின்றேன். எமது மாணவர் மன்றம் அவ்வப்போது மாணவர்களை நல்வழிப் படுத்தக் கூடிய மாணவரிடையே ஐக்கியத்தையும், தேசிய உணர்வுகளையும் உண்டாக்கக் கூடிய அறிவு ஆற்றல் என்பவற்றை அதிகரிக்கக்கூடிய ஒவ்வொருவரும் தன் எதிர் வாழ்நாளை ஒரு சுபீட்சமான முறையில் மாற்றியமைக்கவோ அன்றி ஆரம்பித்து வைக்கவோ கூடியதான ஒரு சூழ்நிலையைக் காலத்துக்குக் காலம் உருவாக்கி வருகின்றது.

எனவே மேற்கண்டவாறு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றை மூலாதாரமாகக் கொண்டு ஏனைய ஆண்டுகளைப்போல இவ்வாண்டும் பல திறப்பட்ட சொல்லின் செல்வர்கள், கருத்தாளிக்க

அறிஞர்கள் விரிவுரையாளர்கள் போன்ற வர்களே காலத்துக்குக் காலம் எமது மன்றம் ஏற்படுத்தியிருந்தபோதிலும் திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் ''இலங்கையில் சிறுபான்மையினர் பிரச்சனைகளும் அவைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும்'' என்னும் பொருள் பற்றிய சாரத்தினையே கேட்கக் கூடியதாக இருந்தது. இதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் எல்லோரும் பூரண திருப்தி அடைந்தார்கள் எனக் கூறுவது மிகையாகாது. இதற்கு எமது மன்றத்தின் சார்பில் நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் எமது மன்றச் செயற்குழு உதவி கல்வியமைச்சர் திரு. B. Y. துடாவை அவர்களைச் சந்தித்து எமது கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு உயர் கல்வி பயிலுவதற்கு வேண்டிய நிவர்த்தியின்மைகளை எடுத்துக் கூறியது மாத்திரமல்லாது ஆவன செய்யவேண்டுமெனவும் வற்புறுத்தியது.

மாணவர்கள் பேச்சாற்றலிலும் சிறந்திருக்க வேண்டும் என்பதற்காக ஒரு விவாதக் குழுவைத் தெரிவு செய்து அதன் மூலம் ஒரு விவாதத்தை இவ்வருடமும் நடாத்த தீர்மானித்துள்ளோம். அத்துடன் இவைகள் எல்லாம் செயல்படுவதற்கு அதாவது ஒரு மன்றம் தனது செயற்திட்டத்தை நிறைவேற்ற நிதி அவசியம் என்பதற்காக மாதந்தோறும் அங்கத்தவர்களிடமிருந்து சந்தாப் பணம் பெற்று வருகின்றோம்.

மேலும் எமது உயர் தர மாணவர் மன்றம் மாணவர்களின் நலனுக்காகவும் நற்பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளுவதற்காகவும் மாணவர்களின் அறிவுரைகள் அனுபவவார்த்தைகள் விருந்தினர்களின் ஆசி உரைகள் என்பவற்றை உள்ளடக்கி வருடந்தோறும் நடந்து வரும் இராப்போசன வைபவத்தை தவிர்க்க முடியாத காரணங்களினால் நடாத்துவதை ஏகமனதாக நிராகரித்து விட்டோம் என்பதை மிகவும் கவலையுடன் கூறுகின்றேன்.

எமது மன்றம் சீரிய முறையுடன் சிறப்புற இயங்கி வருவதற்கு மிகவும் உறுதுணையாக உள்ளவரும் எமது மன்றப் பொறுப்பாசிரியர் அவர்களுமாகிய திரு. வி. சோமசுந்தரம் ஆசிரியர்கட்கும் அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் ஊட்டிவரும் கல்லூரி அதிபர் அவர்கட்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று சொற்களுக்குள் அமைபவர்களும் இவற்றை என்றும் தம் அணிகலன்களாக உடையமன்ற செயற்குழு ஏனைய அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் அன்பையும் தெரிவித்து இதுபோல் என்றும் ஆக்கமும் ஊக்கமும் அயராது அளிப்பீர்கள் என்னும் மனப்பூர்வத்துடன் எனது வருடாந்த அறிக்கையினை இச்சந்தர்ப்பம் மூலம் வெளியிடுகின்றேன்.

வணக்கம்,

க. நவரத்தினம்.
தலைவர்

# வேலை அனுபவக் கழக அறிக்கை

வருடந்தோறும் நடைபெற்று வரும் வேலை அனுபவக்கழகம் 70ஆம் ஆண்டின் முற்பகுதியில் பல ஆக்க முயற்சிகளை மாணவர் வாழ்வுக் காகச் செய்துள்ளது.

பாடசாலைக் கட்டிட அமைப் பையும், பாடசாலை வளவு துப்புரவு செய்தலையும் ஆண்டின் நடுப்பகுதி யில் கைக்கொண்டுள்ளது.

புதிதாக நிர்மாணித்த கட்டி டத்திற்குத் தேவையான 'கல்' மாணவரது பெருமுயற்சியால் நிலத் திலிருந்து எடுக்கப்பட்டவையே யாகும். அத்திவாரத்தின் ஒருபகுதி யும், மாணவர்களது சிரமதான இயக்கமுறையில் வெட்டப்பட்ட வையேயாம்.

பாடசாலை வளவிலுள்ள சிறு பற்றைகளை அழித்தும் நிலத்தை மட்டம் செய்தும் சீராக்கியுள்ளனர். பாடசாலை விளையாட்டிடம் ஆதி யன மாணவர்களது வேலை அனுபவ ரீதியால் சீர்படுத்தப்பட்டனவே யாம்.

மாணவர்களது சிரமதான இயக் கத்திற்கு ஆசிரியர் திரு. V. சோம சுந்தரம் அவர்கள் வழிகாட்டியாக இருந்து அரும்பெருந் தொண்டாற்றி னர். பாடசாலை சக ஆசிரியர்களும் ஒத்தியங்கி ஆக்கவேலை செய்துள்ள னர்.

ம. சின்னையா
பொறுப்பாசிரியர்

● ● ●

## இளைஞர் இயக்கத்தால் ஏற்றம்

உலக சரித்திரத்தை நோக்குழி இளைஞர் முயற்சியாலேயே பல நாடு கள் ஆக்கமுற்ற உண்மை செவ்விதிற் புலனுகும். மாசினி முதலிய தேச பக்தர்கள் இளைஞர் இயக்கத்தின் வாயிலாகவே தங்கள் நாட்டுக்கு விடு தலை கண்டது உங்கட்குத் தெரியும்.

— மணிமொழி

# ஆசிரியர் கழக வருடாந்த அறிக்கை

13–10–69 தொடக்கம் 15–10–70 வரையில் உள்ள எமது கழக அறிக்கையை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கழகம் ஒன்பது நிர்வாக சபைக் கூட்டங்களையும், இரண்டு பிரியாவிடைப் பொதுக் கூட்டங்களையும், ஒரு சிறப்புப் பொதுக் கூட்டத்தையும், ஒரு அவசர பொதுக் கூட்டத்தையும் நடாத்தியுள்ளது. பல பெரியார்களை கழகச் சார்பில் கல்லூரிக்கு வரவழைத்து ஆசிரியர்களுக்கு செவிவிருந்தளித்தனர்.

இக்கழகம் வருடந் தோறும் நடாத்தும் இரவு விருந்தை 3–12–69–ல் மிகச் சிறப்பான முறையில் நடாத்தியுள்ளது. வழமைப் பிரகாரம் கல்லூரியில் இருந்து விலகும் அங்கத்தவர்களுக்குப் பிரிவுபசாரமும் புதிய அங்கத்தவர்களை வரவேற்பு உபசாரமும் செய்வது போல இவ்வருடமும் திருமதி செல்லம்மா முருகேசு அவர்களுக்கும், திருமதி அன்னபூரணம் முருகேசு அவர்களுக்கும், திருவாளர் ந. கந்தர் அவர்களுக்கும் பிரிவுபசார விருந்தும் அன்பளிப்பும் கொடுத்துப் பெருமையடையச் செய்துளது.

திருவாளர் S. குமாரசாமி, திருவாளர் A. நடராசா, திருமதி E. S. லூயிஸ் ஆகிய புதிய அங்கத்தவர்களை வரவேற்று எம்கழகத்தில் சேர்த்துப் பெருமைப்படுத்தியுளது.

பெருமையடையும் நேரத்தில் எம்கழகத்திலிருந்தும், உலக வாழ்க்கையில் இருந்தும் நிரந்தர பிரிவு எய்திய திருமதி R. R. சொலமன், திருவாளர் A. G. இராசரத்தினம் ஆகியோரின் பிரிவை எண்ணிக் கவலையடைகிறது. அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றது.

கல்லூரியுடன் தொடர்புடைய ஆசிரியர்களுக்குத் தேவையான கூட்டமைப்பை அதிபருடன் சேர்ந்து பூர்த்தி செய்துள்ள பெருமையை அறியத்தருவதில் பெருமிதம் கொள்கிறது. அதிபரின் பெருமுயற்சிக்கும் ஒத்துழைப்புக்கும் கழகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. நன்றியும் கூறுகிறது.

மறைந்த பண்டிதர் திரு. S. கந்தையா அவர்களின் ஞாபகார்த்

தமாக கல்லூரிப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றவருக்கு பரிசிலும் வழங்கியுள்ளது.

பண்டிதர் அவர்களின் உருவப் படத்தை பல கஷ்டங்கள் வசதியீனங்கள் காரணமாக இந்த வருடம் திரை நீக்கம் செய்ய முடியாமற் போய்விட்டது. இப்பணியைப் புதிய நிர்வாக சபையிடம் ஒப்படைத்துள்ளோம். அவர்கள் கூடிய விரைவில் செய்து முடிப்பார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

எம் கழகம் சிறந்த முறையில் நடந்தேறியமைக்கு அங்கத்தவர்களது ஒத்துழைப்பும் தலைவர் திரு. S. செல்வரத்தினம் அவர்களது பெருமுயற்சியும் அதிபரது கண்ணியமுமே காரணமாகும்.

கழகம் இன்றுபோல் என்றும் சிறப்புடன் விளங்க இறைவன் அருள் புரிவாராக.

க. நா. கணேசன்
செயலாளர்

ஆராய்தலே அறிவுடைமை

பழமையில் நல்லனவும் இருக்கலாம்; தீயனவும் இருக்கலாம்; அங்ஙனே புதுமையிலும் தீயனவும் இருக்கலாம்; நல்லனவும் இருக்கலாம். பழமை, புதுமை என்னும் அளவில் நின்று, ஒன்றைத் தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமையாகாது. அதனை அதன் தன்மைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமை.

— மணிமொழி

# கோப்பாய்

# கிறிஸ்தவ கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

## கொழும்புக் கிளை

## முதலாவது ஆண்டு அறிக்கை

**அன்பு கனிந்த வாழ்த்துக்கள்**

கோ. கி. க. ப. மா. ச. கொழும்புக் கிளையின் நிர்வாக சபை தனது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பேருவகையடைகிறது.

**உறுப்பினர்**

பழைய மாணவர் பட்டியலின் படி 120 பழைய மாணவர்கள் அங்கம் வகிக்கின்றனர். செயற் குழுவின் குன்றாத ஊக்கத்தினாலும், உறுப்பினரின் குறையாத ஆர்வத்தினாலும் எமது உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

**நிர்மாணங்கள்**

நவரத்தினராஜா ஞாபகார்த்த மண்டபத்திற்காக நிதி நிரட்டுதல்.

**நன்றிகள்**

இக்கிளையின் உறுப்பினர் காட்டிய ஒத்துழைப்புக்கும், ஒற்றுமைக்கும் செயற்குழு நன்றிக்கடன்பாடுடையதாக இருக்கின்றது. இதே போன்ற ஒத்துழைப்பை ஏனைய பழைய மாணவர்களும் நல்கும்படி பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறது.

**முடிவுரை**

இத்தகைய சங்கம் தொடர்பாக ஒரு நிரந்தர ஸ்தாபனமாக மேலும் விளங்கவேண்டுமாயின் அது பழைய மாணவர்கள் ஒவ்வொருவரினதும் குன்றாத ஆர்வம், ஐக்கியம், ஒத்துழைப்பு ஆகியவற்றில் தான் தங்கியிருக்கிறது.

வருடாந்த மகாசபை 1970ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் நாள் இந்துகனிஷ்ட பாடசாலையில் நடைபெற்றது. பிரதம விருந்தினரின் வராமைகாரணமாக திரு. எஸ். தில்லைராஜா அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள். பின்வருபவர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. க. கே. சண்முகநாதன்

துணைத்தலைவர்கள்:

திரு. எஸ். தில்லைராஜா
திரு. வி. இரத்தினம்
திரு. எ. வி. முருகையா

செயலாளர்: திரு. என். சிவநாதன்

துணைச்செயலாளர்:

திரு. எஸ். குமாரசாமி

பொருளாளர்:

திரு. பொ. விக்கினேஸ்வரலிங்கம்

செயற்குழு உறுப்பினர்:

திரு. எஸ். குமாரசாமி
திரு. வி. சிவபாலரத்தினம்
திரு. கே. இராஜலிங்கம்
திரு. வி. இராஜேந்திரம்
திரு. எஸ். சுப்பிரமணியம்
திரு. பி. மார்க்கண்டு
திரு. கே. சிவசோதி
திரு. எஸ். இருபராஜா
திரு. ரி. ஆனந்தராஜா
திரு. வி. நடராஜா

கணக்காய்வாளர்:

திரு. எஸ். கணேசலிங்கம்

கோ. கி. க. ப. மா. சங்கச் சார்பில்

என். சிவநாதன்
கௌரவ செயலாளர்
கோ. கி. க. ப. மா. ச.
(கொழும்புக் கிளை)

◉ ◉ ◉

## வாழ்வைத் தொடாத கல்வி

இந்நாளில் கல்வி என்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாதொழிகிறது. இது கல்வியாகுமா?

— மணிமொழி.

## G. C. E. O/L DEC. 1969

**Pass List with credits & Distinctions**

1. Anpananthar R. – Hinduism
2. Arumugajothy V. – Hinduism
3. Ratnakumar K. – Hinduism, *Pure Mathematics
4. Rasalingam N. – Hinduism, Tamil Language
5. Ramachandran K. – Hinduism, Tamil Language, Tamil-Literature, Physics, Chemistry, Biology
6. Eladchumykanthan R. – Hinduism
7. Kanagaratnam K. – Hinduism, Tamil Language, Tamil-Literature, Physics, Chemistry, Biology
8. Gunasekaram V. Hinduism, Tamil Lauguage, Tamil Literature
9. Sivaseelan N. – *Hinduism, Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics, Chemistry
10. Sivaloganathan A. – Hinduism, Tamil Literature, Pure, Mathemetics, Physics
11. Srivickramarajah R. – Christianity
12. Suthananthan M. – Hinduism, Tamil Literature
13. Navaratnam K. – *Hinduism, Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics, Chemistry, Biology
14. Mahendran K. – Hinduism
15. Mahendran S. – Hinduism
16. Logeswaran S. – *Hinduism, Tamil Literature, History Geography, Health Science
17. Varatharajah T. – Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics
18. Jeyanathan N. – Christianity, Tamil Language, Tamil Literature.
19. Sriskantharajah P. – Hinduism, Tamil Literature

20. Gunasekaran K. – Hinduism.

21. Karthigesu P. – Hinduism, Tamil Language, Tamil Literature, Chemistry.

22. Amirthagowri N. – Hinduism, Tamil Literature.

23. Ruthrakumari S. – Hinduism.

24. Kalaichelvi S. – Hinduism, Tamil Language, Tamil Literature Biology.

25. Kunchumany A. – Hinduism, Tamil Literature.

26. Chandradevy R. – * Hinduism, Tamil Language, Tamil Literature

27. Saraswathy S. – Hinduism, Tamil Language, Tamil Literature, Geography, Home Science.

28. Sarojinidevi T. – Hinduism, Tamil Literature, Pure Maths.

29. Saroja V. – Hinduism, Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics, Biology.

30. Sarojinidevi S. Hinduism, Tamil Language.

31. Sivamany S. – Hinduism, Tamil Literature.

32. Sivaneswary P. – * Hinduism, Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics, Biology.

33. Suthanithy R. – Hinduism.

34. Suryagulasigamany K. – Hinduism.

35. Tharany M. – Hinduism, Tamil Language, Tamil Literature.

36. Thiraviam M. – * Hinduism, Tamil Language, Tamil Literature, Arithmetic, Geography.

37. Thilaganayaki K. – * Hinduism, Tamil Literature.

38. Thilagavathy P. – * Hinduism, Tamil Language, Pure Maths, Geography, Physics.

39. Theivamanohari S. – * Hinduism, Tamil Literature.

40. Thevaky B. – Hinduism, Pure Maths, Physics, Biology.

41. Nagaratnapoopathy S. – Hinduism, Tamil Literature.

42. Pathmavathy E. – Hinduism, Tamil Literature.

43. Pushpamalar S. – Tamil Literature, Home Science.

44. Pushparanee K. – Tamil Literature.

45. Mahathevy K. – Hinduism.

46. Mathuravani R. – Hinduism, Tamil Literature.

47. Manonmany T. – Hinduism, Tamil Literature, Home Science.

48. Mohanajeyaluxmy J. – Hinduism, Tamil Literature, Physics.

49. Vasanthy N. – Hinduism, Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics.

50. Vinayagathevy K. – Hinduism, Tamil Literature.

51. Vimaladevy S. – Hinduism, Tamil Language, Tamil Literature, Pure Maths, Physics.

52. Jeyamany K. – Hinduism, Tamil Language, Tamil Literature.

53. Srimathy Kamalathevy K. – Hinduism, Tamil Language, Tamil Literature, Home Science.

* Denotes Distinction

## G. C. E. A/L APRIL 1970

| | Tamil | History | Geography | Govt. |
|---|---|---|---|---|
| 1. Sathianathan N. | — | S | S | S |
| 2. Subramaniam P. | S | S | S | S |
| 3. Muthukumaraswamy T. | S | S | S | C |
| 4. Kugaprasatham K. | — | — | S | S |
| 5. Nadesapillai V. | — | S | S | S |
| 6. Suthanthiradevi R. | S | S | — | S |
| 7. Mathivathana R. | S | — | S | S |
| 8. Manonmany K. | S | S | S | S |
| 9. Thiraviam M. | — | S | C | S |

## WEDDING BELLS

Our congratulations to the following couples on their marriage.

Mr. & Mrs. P. Sathananthan
Mr. & Mrs. T. Kathiravelu
Mr. & Mrs. T. Jesuthasan
Mr. & Mrs. K. Veerasingham
Mr. & Mrs. S. Sivathasan
Mr. & Mrs. S. Murugesu
Mr. & Mrs. H. R. Jesudasan
Mr. & Mrs. I. S. J. Wadsworth
Mr. & Mrs. K. Thangavadivel
Mr. & Mrs. K. Kugakumararajah
Mr. & Mrs. A. Yogavanam

●

## OBITUARY

We record with deep regret the death of the following:

Mrs. R. R. Solomons
Mr. A. G. Rajaratnam
Mr. K. Murugesu
Mr. J. R. Thambyaiah
Mr. M. Ariacuddy
Mrs. M. Gnanapragasam
Miss. Sarojinidevi

FRONT ELEVATION




FRONT ELEVATION

## Ground Plan of Proposed N




UPPER FLOO




GROUND FLO

**Index:**

D B — Demonstration Bench
W B — Work Bench
B B — Black Board
S B — Side Bench

## nd Plan of Proposed New Science Block




**UPPER FLOOR**




**GROUND FLOOR**

monstration Bench
ork Bench
ack Board
de Bench

S — Sink
F C — Fume Cupboard
B C — Balance Cupboard
T — Tables

## NAVARATNARAJAH MEMORIAL FUND

## STATEMENT OF ACCOUNT FOR THE PERIOD JANUARY – DECEMBER 1970

| Income | Rs. Cts. | Expenditure | Rs. Cts. |
|---|---|---|---|
| Balance on 31st December | 12204 29 | Transport (Dance recital) | 211 00 |
| Card Collection | 3180 23 | Hire for chairs and glasses (Dance recital) | 175 00 |
| Dance Recital | 8683 17 | Other expenses | 158 55 |
| Donations by | | By Deposit in Bank | 24488 75 |
| 1. Mr. K. Kanagalingam | 150 00 | | |
| 2. Mr. M. S. Kandiah | 200 00 | | |
| 3. Donation (Misc.) | 345 00 | | |
| Interest | 270 61 | | |
| Total | 25033 30 | Total | 25033 30 |

I have great pleasure in submitting the accounts of the above Fund for the period ending 31-12-70.

Our attempt to erect a building in memory of the late Mr. E. C. A. Navaratnarajah is now nearing fruition. Plans have been submitted to the Education Department for approval and as soon as it is received we propose to start building operations. As will be seen from the above statement of accounts the amount collected is hardly sufficient to put up even the ground floor. (A copy of the plan is found elsewhere in this issue.)

We appeal to all old students, well-wishers and friends to give – and give generously – to achieve our objective.

V. Somasundram
*Hony. Secretary.*

## OLD STUDENTS APPOINTMENT & PROMOTIONS

1. Mr. M. S. Rasiah – Medical Representative, International Pharmaceutical Co. Ltd. Colombo .
2. ,, S. Kumarasamy – Draughtsman, Surveyors General's Office, Colombo 15.
3. ,, S. Rasa - Clerk, E. C. C. Gr. 1; Commercial Accounts Branch, G. P. O. Colombo.
4. ,, J. S. S. Ananthan - Asst. Controller, Dept. of Immigration and Emigration. Colombo.
5. ,, R. Rajakumar - Civil Foreman, Mitsui & Co Ltd. Col. 15.
6. ,, K. Sathiyavanthan - Labugama Estate, Tummodere.
7. ,, S. Thiyagarajah - Clerk, E. C. C. Gr. 1; C. G. R; Col. 10.
8. ,, V. Maharajah - Accountant, M/s Dejay Industries Ltd. Mt. Lavinia.
9. ,, M. Coomarasamy – Asst. Govt. Analyst, Govt. Analyst's, Office, Colombo 7.
10. ,, T. Kurusamy Sarma - Clerk, Expenditure Branch, G. P. O. Colombo 1.
11. ,, S. Sothilingam - Clerk, Cr. II, General Hospital, Colombo.
12. ,, N. Sivalingam - Supervising Overseer, Dept. of Highways, Ratmalana.
13. ,, S. Kanesalingam - Chartered Accountant, Kanesalingam & Co. Colombo 1.
14. ,, S. Thillairajah – Chartered Accountant, Whittalls Group, Colombo 2.
15. ,, P. Vigneswaralingam – Dept. of Buildings, Colombo 1.
16. ,, M. Sivananthan – Apprentice, Harrison Lister Engineering Ltd. Colombo.
17. ,, S. Yogeswaran - Clerk, Reckit & Colman of Ceylon Ltd. Colombo.
18. ,, K. Amarasingham – Postmaster Cl. II; C. T. O; Colombo.

19. Mr. S. V. Vanniasingam – E. C. C. Gr I; Dept. of Import & Export Control, Colombo 1.

20. ,, V. Sivapalaratnam – Office of the C. T. E. P & T; Head Quarters, Colombo 1.

21. ,, V. Nadarajah – Clerk, E. C. C. Gr II; Ceylon Electricity Board, Colombo 2.

22. ,, V. Nadarajah – Postmaster, General's Office, Colombo 1.

23. ,, K. Thangavadivel – Valuation Inspector, Municipality, Gaffor Building Colombo 1.

24. ,, A. V. Murugiah – Chief Accountant, State Timber Corp. Colombo 4.

25. ,, S. Sithampareswaran – Audit Asst; H. T. Peris & Co; Col. 1.

26. ,, V. Nadarajah – Office of the Judical Medical Officer Colombo 10.

27. ,, K. Pathmanathan - Advocate, Colombo.

28. ,, S. Kugathasan – Faculty of Medicine, Colombo 8.

29. ,, S. Sinnathamby - Chief Accountant, Dept. of Land Development Colombo 1.

30. ,, S. Thillainadarajah – Accountant, C. T. B. Depot, Colombo 5.

31. ,, N. Sivagnanapragasam - Accountant, Ministry of Health, Colombo 1.

32. ,, S. Karunairatnam - Accountant, C. T. B. Depot, Colombo.

33. ,, K. S. Ponnudurai - Senior Asst. Commissioner of Co-Op. Development, Colombo 1.

34. ,, C. Kanagasabai – Asst. Commercial Supdt. of Railways, Colombo 10.

35. ,, C. W. Karunairajan – Deputy Director, Dept. of Govt. Supplies, Colombo 2.

36. ,, N. Sathasivam – Offcie of the Govt. Supplies, Colombo 2.

37. ,, S. Vinayagamoorthy – Accountant, Dept. of Irrigation, Ratmalana.

38. ,, S. Kumarasamy – Whittall & Bousteads Ltd., Colombo 2.

39. Mr. N. Navaratnam – Gordon Frazer & Co. Ltd. Colombo 12.
40. „ S. Suppiramaniam – Gordon Frazer & Co. Ltd. Colombo 12.
41. „ S. Chelliah – Supervising Officer, C. T. O. Colombo 1.
42. „ V. Jeyasingam – D. I. T. Power Loom, Colombo.
43. „ S. Sundararajah – Foreman, National Textile Corporation Veyangoda.
44. „ M. Kanagasabesan – Dept. of Labour, Colombo 5.
45. „ P. Nallathamby – A. M. P. Maternity Home, Navatkadu.
46. „ S. Sothilingam – M/s. Walker & Sons, Kandy.
47. Mrs. J. G. Thambirajah – Fairline Motors, Moratuwa.
48. Miss C. Nadarajah – Pupil Teacher, Convent, Wattale.
49. Mr. K. Veerasingam – Pharmacist, Govt. Hospital, Nawalapitiya.
50. „ V. Kandiah – Port Cargo Corp. Colombo.
51. „ M. Sinnarajah – W & T, Avery Ltd; Colombo 1.
52. „ K. Sivasothy – Contractor, Colombo 6.
53. „ C. R. Atputhasingham – Draughtsman, Singer Industries, Colombo
54. „ K. Anandavadivel – Chief Chemist, Sithras Ltd. Colombo.
55. „ S. Mahalingam – Clerk, Gr. II, Internal Audit, Dept. of Exams, Colombo.
56. „ V. Mahalingam–Revenue Branch, Colombo Port Commission Colombo 1.
57. „ A. Gnanaratnam — A. M. P. Hospital, Kattankudi.
58. „ K. Kugakumararajah – Lecturer, Training College, Nallur.
59. Dr. S. Rajendran – Intern, Govt. Hospital, Kurunegala.
60. Mr. A. Kasipillai – M/s Ceylon, Cold Stores, Colombo 2.
61. „ V. Sivaprakasam – O-I-C Excise Station, Kankesanturai.
62. „ R. Rajadurai – Local Govt. Clerical Service, Trincomalee.
63. Miss Saroja Kandiah – Asst. Lecturer, University of Ceylon

The following Old Students have been successful in the Examination of the University of Ceylon.

Miss G. Sinnappu — Final Arts.
Mr. M. Paramanantharajah — Final Arts.
Miss L. Kandiah — Final Arts.